# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 247 ஆடி 28

Regd. No.CBE/090/2011-2013

கோவை, புதன், ஆகஸ்ட் 13, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**சீனா மீதான வரிவிதிப்பு 90 நாட்கள் நிறுத்திவைப்பு: அமெரிக்கா அதிபர் உத்தரவு**

....2-ம் பக்கம்

**24 மணிநேரத்தில் 25 லட்சம் பேர்: வாக்குத்திருட்டு விவகாரத்தில் ராகுலுக்கு பெருகும் ஆதரவு**

...3-ம் பக்கம்

**ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்: இந்திய அணியில் ஜஸ்பிரித் பும்ரா சேர்ப்பு..?**

....6-ம் பக்கம்





சென்னை தண்டையார்பேட்டை கோபால்நகர், அன்னை சத்யா நகரில் நேற்று மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்து அவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாடினார். இதில் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஆர்.டி.சேகர், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

### முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்

# முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடி வரும் ரேஷன் பொருட்கள்

*** சென்னையில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்**
*** தமிழ்நாடு முழுவதும் 21,70,454 பேர் பயன் அடைவர்**

சென்னை, ஆக. 13-

**தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அடைதாரர்களின் வீடுகளுக்கே நேரில் ரேசன் பொருட்களை தரும் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தை மு.க. ஸ்டாலின் நேற்று சென்னை தண்டையார்பேட்டை கோபால் நகரில் தொடங்கி வைத்தார்.**

**மூத்த குடிமக்கள்....**

தமிழகம் முழுவதும் 34,809 நியாய விலைக்கடைகளில் செயல்படுத்தப்படவுள்ளது. 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளும் ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**விநியோகம் செய்ய....**

முன்னதாக இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில் கூறியிருந்ததாவது:- மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின்

**மனதுக்கு பிடித்த திட்டம்**

**முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை 34,809 நியாய விலைக்கடைகளில்செயல்படுத்தப்போகிறோம்.70வயதுக்கு மேற்பட்ட 20,42,657 மூத்த குடிமக்கள், 1,27,797 மாற்றுத் திறனாளிகள் என 21,70,454 பேர் இத்திட்டத்தின் மூலம் பயனடையப் போகிறார்கள். இது எனக்கு மனதுக்கு பிடித்த திட்டம். ஒரு திட்டத்தை அறிவித்த உடன் கடமை முடிந்து விட்டதாக நாங்கள் நினைக்கவில்லை. அந்த திட்டத்தின் பலன் கடைக்கோடியில் இருக்கும் கடைசி மனிதனையும் சென்று சேர்கிறதா என்பதையும் கண்காணிக்கிறோம்.**

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

வாயிலாக 34,809 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளும், ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே ரேஷன் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**2-வது சனிக்கிழமை....**

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் பயனாளர்களின் விவரம் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டு. கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்னணு எடைத்தராசு, இ-பாஸ் இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களை பாதுகாப்பாக தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

**சென்னையில் துவக்கம்...**

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்குவதால் அரசுக்கு ரூ.30.16 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம். நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும். தமிழ்நாடு முதல்வர் நேற்று (12-08-2025) இத்திட்டத்தை சென்னையில் தொடங்கி வைக்கும் வேளையில், மாவட்டங்களில் அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### பீகார் சிறப்பு தீவிர திருத்த தொடர்பான வழக்கு:

# ஆதார் சரியான குடியுரிமை அடையாள ஆவணம் அல்ல

**தேர்தல் ஆணையத்தின் வாதத்தை ஏற்றது சுப்ரீம் கோர்ட்**

புது தில்லி, ஆக. 13-

**ஆதார், குடும்ப அட்டை உள்ளிட்டவற்றை குடியுரிமை ஆவணமாக ஏற்க முடியாது என்ற தேர்தல் ஆணையத்தின் கருத்தை ஏற்பதாக சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது. பீகார் சிறப்பு வாக்களர் திருத்தம் தொடர்பான வழக்கில் சுப்ரீம் கோர்ட் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளது.**

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது வாக்காளர்களின் குடியுரிமை ஆவணமாக ஆதார், குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவற்றை குடியுரிமை ஆவணமாக ஏற்க முடியாது என்ற நிபந்தனையை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. பீகாரில் நிகழாண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யும் பணியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டது.

இந்த பணியில், 'பீகாரில் கடந்த 2003-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றவர்கள், எந்தவொரு ஆதார ஆவணங்களையும் தாக்கல் செய்யத் தேவையில்லை. ஆனால், அந்தப் பட்டியலில் இடம்பெறாத வாக்காளர்கள், தங்களின் குடியுரிமையை நிரூபிக்க பிறப்புச் சான்றிதழ், கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) நகல் போன்ற கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதை எதிர்த்து பல்வேறு கட்சிகள் மற்றும் ஜனநாயக சீர்திருத்தத்துக்கான சங்கம் (ஏடிஆர்) சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு கடந்த ஜூலை மாதம் விசாரணைக்கு வந்தபோது, இரு தரப்பு வாதங்களையும் கேட்ட சுப்ரீம் கோர்ட், பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் போது வாக்காளர்களின் குடியுரிமை ஆவணமாக ஆதார், குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவற்றை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது.

இது குறித்து பதிலளிக்கவும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்த நிலையில், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, ஆதார், குடும்ப அட்டை உள்ளிட்டவற்றை குடியுரிமை ஆவணமாக ஏற்க முடியாது என்ற தேர்தல் ஆணையத்தின் கருத்தை ஏற்பதாக சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

### நீதிபதி யஷ்வந்த் வர்மா விவகாரத்தில்

# 3 பேர் கொண்ட விசாரணைக்குழு; மக்களவை சபாநாயகர் அறிவிப்பு

**சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி இடம் பெற்றார்**

புதுடெல்லி, ஆக. 13-

**அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் மூட்டை மூட்டையாக பணம் கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக அவரிடம் விசாரணை மேற்கொள்ள மூன்று பேர் அடங்கிய விசாரணைக் குழுவை பாராளுமன்ற சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்துள்ளார். சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா உள்ளிட்ட 3 பேர் இடம் பெற்றுள்ளனர்.**

நீதிபதிகள் விசாரணைச் சட்டம் 1968-ன் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ள ஓம் பிர்லா, சுப்ரீம் கோர்ட் நீதிபதி அரவிந்த் குமார், சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா, கர்நாடக உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா ஆகியோர்



மூத்த வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா, நீதிபதி அரவிந்த் குமார், சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா.

விசாரணை மேற்கொள்வார்கள் என தெரிவித்துள்ளார். இந்த விசாரணைக் குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்வரை மேல் நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுகிறது என்றும் சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்துள்ளார்.

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய யஷ்வந்த் வர்மா வீட்டில் கடந்த மார்ச் 14-ம் தேதி தீ விபத்து ஏற்பட்டது. அப்போது அவர் வீட்டில் இல்லை. தகவல் அறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் போலீஸார் வீட்டில் தீயை அணைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அப்போது ஒரு அறையில் பல மூட்டைகளில் கட்டுக்கட்டாக பணம் எரிந்து சாம்பலாகி கிடப்பது தெரியவந்தது.

இது குறித்து சுப்ரீம் கோர்ட்த்தின் அப்போதைய தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னாவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனிடையே, வர்மா அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். பின்னர், தலைமை நீதிபதி நியமித்த குழு தீவிர விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பித்தது. இதன் அடிப்படையில் பதவி விலகுமாறு நீதிபதி யஷ்வந்த் வர்மாவிடம் தலைமை நீதிபதி அறிவுறுத்தினார். ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து விட்டார்.

இதைத் தொடர்ந்து வர்மாவை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் தலைமை நீதிபதி கடிதம் அனுப்பினார். இந்நிலையில், நீதிபதிகள் விசாரணைச் சட்டம் 1968ன் கீழ் நீதிபதி யஷ்வந்த் வர்மா மீது நடவடிக்கை எடுக்கும் நோக்கில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தற்போது குழு அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 12-வது நாளை எட்டிய போராட்டம்:

# தூய்மை பணியாளர்கள் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் முடிவு எடுப்பார்

**அமைச்சர் கே.என்.நேரு தகவல்**

சென்னை, ஆக. 13-

**தூய்மைப் பணியில் வடமாநில தொழிலாளர்களை ஈடுபடுத்த உள்ளதாக கூறுவது வதந்தி என்று தெரிவித்துள்ள அமைச்சர் கே.என்.நேரு, தூய்மை பணியாளர்களின் போராட்டம் விரைவில் முடிவுக்கு வரும் என்றும் தூய்மை பணியாளர்களை நிரந்தரம் செய்வது குறித்து முதல்வர் முடிவு எடுப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

சென்னை மாநகராட்சியின், 5 மற்றும் 6-வது மண்டலங்களில் ரூ.276 கோடி தூய்மைப்பணி ஒப்பந்தத்தை தனியார் நிறுவனத்துக்கு வழங்கி, கடந்த ஜூன் 16-ந்தேதி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் பில்டிங் அருகில் தூய்மைப் பணியாளர்கள், தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தூய்மை பணியாளர்கள் போராட்டம் நேற்று 12-வது நாளை எட்டி உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்கள் உடனடியாக பணிக்கு திரும்புமாறு தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது. பொதுநலம் கருதி, பணி பாதுகாப்பு குறித்த உண்மை நிலையை அறிந்து பணிக்கு திரும்புமாறு தூய்மை பணியாளர்களுக்கு சென்னை மாநாகராட்சியும் வலியுறுத்தி உள்ளது.

இதற்கிடையே, சென்னை மாநகராட்சியின் அழைப்பை தூய்மை பணியாளர்கள் புறக்கணித்து போராட்டம் தொடரும் என திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்கள், எங்கள் துறை அமைச்சரான கே.என்.நேரு எங்கே? என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை துறை அமைச்சரான நேரு சந்திக்காதது ஏன்? என்று கேள்வி எழுப்பி இருந்தனர்.

இந்த நிலையில், தூய்மை பணியாளர்கள் போராட்டம் குறித்து திருச்சியில் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் கே.என்.நேரு கூறியதாவது:- போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்களை இதுவரை 4 முறை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளோம். கிட்டத்தட்ட 300 பேர் மீண்டும் பணிக்கு வந்துள்ளனர். நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால், வழக்கை முடித்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருவதாக தூய்மை பணியாளர்கள் கூறினர். அனைவரிடமும் பேசிவிட்டு தான் வந்துள்ளேன். சுமூகமாக இந்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முதல்வர் அறிவுறுத்தி உள்ளார்.

தூய்மைப் பணியில் வடமாநில தொழிலாளர்களை ஈடுபடுத்த உள்ளதாக கூறுவது வதந்தி. எந்த தூய்மை பணியாளரையும் பணியை விட்டு நீக்கவில்லை. சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் விவகாரத்தில் விரைவில் நல்ல முடிவு எட்டப்படும். தூய்மை பணியாளர்களை நிரந்தரம் செய்வது குறித்து முதல்வர் முடிவு எடுப்பார். தூய்மை பணியாளர்களின் கோரிக்கையை ஒரே நாளில் நிறைவேற்ற முடியாது; அதற்கு கால அவகாசம் தேவை.

இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இன்று உருவாகிறது புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி

சென்னை, ஆக. 13-

**வடமேற்கு மற்றும் அதனை ஒட்டி உள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இன்று காற்றழுத்த தாழ்வு பகுதி (புயல் சின்னம்) உருவாகக்கூடும் என்றும் இதன் காரணமாக திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடமேற்கு மற்றும் அதனை ஒட்டி உள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இன்று காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இதனால் இன்று (13-08-2025) திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல், வடக்கு வங்கக்கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், மத்திய மேற்கு அரபிக்கடலின் அநேக பகுதிகளில் சூறாவளிக்காற்று வீசக்கூடும். எனவே, இன்று முதல் ஆக. 15ம் தேதி வரை மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -368.49 | -97.65 |
| பாயின்ட் 80,235.59 | பாயின்ட் 24,487.40 |

**தங்கம்** 1 சவரன் ₹74,360 · 1 கிராம் ₹9,295

**வெள்ளி** 1 கிலோ ₹126,000 · 1 கிராம் ₹126.00

**டாலர்** ₹87.63

**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34

வரி விதிப்பு விவகாரத்தில் சலுகை:

# சீனா மீதான வரிவிதிப்பு 90 நாட்கள் நிறுத்திவைப்பு

## அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் உத்தரவு

**வாஷிங்டன், ஆக. 13-**

சீனா மீதான வரி விதிப்பை மேலும் 90 நாள்களுக்கு நிறுத்திவைப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.



அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரி 20-ந் தேதி பொறுப்பேற்று கொண்ட டொனால்டு டிரம்ப், பல உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அதில் ஒன்றாக, நாடுகளுக்கு வரி விதிப்பதும் அடங்கும்.வரி வருவாயை கொண்டு நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டது போல் இருந்தபோதும், அதனை பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடுமையான வரி விதிப்புகளை அமல்படுத்தி டிரம்ப் உத்தரவிட்டார். பிரேசில் நாட்டுக்கு மொத்தம் 50 சதவீத வரி விதிப்பதற்கான உத்தரவிலும், சமீபத்தில் டிரம்ப் கையெழுத்திட்டார்.

இதேபோன்று, இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிப்பு மற்றும் கூடுதல் அபராதம் ஆகியவற்றை விதித்து டிரம்ப் உத்தரவிட்டார். சீனாவுக்கு 30 சதவீத வரி விதிப்பு அமலில் உள்ளது. முன்னதாக பரஸ்பர வரி விதிப்புக்கு சீனா பதிலடி கொடுத்ததால் அந்த நாட்டின் பொருட்களுக்கு 145 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அறிவித்தார். பின்னர் இரு நாடுகளும் மேற்கொண்ட ஆலோசனைக்கு பிறகு அதனை நிறுத்தி வைத்தார்.

வர்த்த ஒப்பந்தம் ஏற்படுவதற்காக இந்த வரி விதிப்பை நிறுத்தி வைத்து டிரம்ப் அறிவித்தார். இதற்கான கெடு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிந்த நிலையில், தற்போது மேலும் 90 நாட்களுக்கு அவகாசத்தை நீட்டித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்தியாவுக்கு கெடு முடியும் முன்பே வரியை விதித்த டிரம்ப், சீனாவுக்கு மேலும் 90 நாட்கள் அவகாசத்தை நீட்டித்து இருப்பது சீனாவுக்கு சலுகை காட்டும் வகையில் அமைந்துள்ளது.

# ஓட்டுநர் உரிமம் வழங்கக் கோரிய டி.டி.எப். வாசன் மனு தள்ளுபடி

**சென்னை, ஆக. 13-**



ஆபத்தான முறையில் பைக் ஓட்டிய டி.டி.எப். வாசன் ஓட்டுநர் உரிமம் தொடர்பான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் டி.டி.எப். வாசன். இவர் பைக்கில் சாகசப் பயணங்கள் மேற்கொண்டு, அவற்றை யூடியூப்பில் பதிவேற்றுவதை வாடிக்கையாக கொண்டு இருந்தார். அவரது வீடியோக்களை பார்த்த இளம் வயதினர் பலரும் அவரை சமூக வலைத்தளங்களில் அதிகம் பின்தொடர்ந்தனர். டி.டி.எப். வாசன் ஆபத்தான முறையில் பைக் ஓட்டி வந்ததால், அவர் மீது போக்குவரத்து விதிகளை மீறியதாகப் பல வழக்குகள் பதிவாகியுள்ளன.

தொடர்ந்து விதிமீறல்களில் ஈடுபட்டதால், டி.டி.எப். வாசனின் வாகன ஓட்டுநர் உரிமத்தை காஞ்சிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரத்து செய்து உத்தரவிட்டார். அவரது ஓட்டுநர் உரிமம் 10 ஆண்டுகளுக்கு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து, டி.டி.எப். வாசன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், டிடிஎஃப் வாசனின் கோரிக்கையை ஏற்க மறுத்ததோடு, இது தொடர்பாக உரிய அதிகாரிகளை அணுக வேண்டும் எனக் கூறி, மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.




தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்து, தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

புத்தகத்தை பார்த்து தேர்வு

# எழுதினால் அறிவு எப்படி வளரும்? அமைச்சர் அன்பில் மகேஷ் கேள்வி

**திருச்சி, ஆக. 13-**

சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில்புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதினால் அறிவு எப்படி வளரும்? என அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் திருச்சி மண்டலம் மூலம் திருச்சி மாநகரின் துவாக்குடி, கே.கே.நகர், ஸ்ரீரங்கம், விமான நிலையம் உள்ளிட்ட வழித்தடங்களில் நேற்று முன்தினம் புதிய தாழ்தள சொகுசு பஸ் சேவையை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். அப்போது அவரிடம், சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் 9-ம் வகுப்பு மாணவர்கள் புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதலாம் என்ற புதிய கல்விக் கொள்கை அறிவிப்பு பற்றி நிருபர்கள் கேட்டதற்கு, புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதினால் அறிவை எப்படி வளர்க்க முடியும்? என்று தெரிவித்தார்.

மத்திய இடைநிலை கல்வி வாரியம் என்று கூறப்படும் சி.பி.எஸ்.இ. நிர்வாகத்தின் கீழ் நாடு முழுவதும் ஏராளமான பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. சி.பி.எஸ்.இ. பாடத்திட்ட மாணவ-மாணவிகளுக்கு ஏற்றவாறு பாடத்திட்ட வடிவமைப்பு அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடத்திட்டங்களும் அதில் இணைக்கப்படுகின்றன. சில தேவையற்ற பாடக்குறிப்புகள் எடுக்கப்படும் போது அது சர்ச்சையாகும் சூழலும் ஏற்படுகிறது.

இதேபோல் மாணவர்களின் தேர்வு சுமையை குறைக்கவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதில் ஒரு பகுதியாக சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு மாணவர்கள் ஒரு கல்வி ஆண்டில் இரண்டு முறை அதாவது, ஆண்டின் பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் தேர்வு எழுத வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த இரண்டு தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை இறுதி முடிவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்க உதவும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதன் தொடர்ச்சியாக தற்போது 9-ம் வகுப்பு மாணவர்களுக்கும் தேர்வு நடைமுறையில் சில மாற்றங்களை சி.பி.எஸ்.இ. நிர்வாகம் கொண்டு வந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

அந்தவகையில், 9-ம் வகுப்பில் திறந்த புத்தக மதிப்பீடுகளை ஒருங்கிணைக்கும் புதிய திட்டத்திற்கு சி.பி.எஸ்.இ. வாரியத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் நிர்வாகக்குழு ஒப்புதல் அளித்து இருப்பதாக சொல்லப்படுகிறது.

வருகிற செப்டம்பர் 7-ந்தேதி தேதி...

# வரும் 7-ம் தேதி முழு சந்திர கிரகணம்: சென்னையில் முழுமையாக தெரியும்

**சென்னை, ஆக. 13-**

வருகிற செப்டம்பர் 7-ந்தேதி முழு சந்திர கிரகணம் நிகழ உள்ளது. இதை சென்னையில் உள்ளவர்கள் வெறும் கண்களால் பார்க்கலாம்.

சந்திர கிரகணம் என்பது சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும் போது ஏற்படுகிறது. பூமி, சூரிய ஒளியை சந்திரன் மேல் விழாமல் தடுப்பதால் சந்திரன் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். இதை ரத்த நிலவு என்றும் சொல்வார்கள். செப்டம்பர் 7-ந்தேதி இரவு 8.58 மணிக்கு தொடங்கும் கிரகணம் 8-ந் தேதி அதிகாலை 2.25 மணி வரை தெரியும். இதை எந்த வித கருவிகளும் இன்றி வெறும் கண்களாலேயே பார்க்கலாம். குறிப்பாக சென்னையில் உள்ளவர்கள் கிழக்கு நோக்கி வானத்தை பார்த்தாலே போதும் முழு சந்திர கிரகணத்தை பார்த்து ரசிக்கலாம்.

பூமியின் லேசான நிழலுக்குள் சந்திரன் நுழையும் கட்டத்தை பெனும்பிரல் என்று அழைக்கிறார்கள். அதில் தொடங்கி கிரகணம் மேலும் வளர்கிறது. இதை காண்பதற்கு மட்டும் தொலைநோக்கி தேவைப்படலாம். பூமியின் மைய இருண்ட பகுதியான அம்ப்ரா சந்திரனை மறைக்கத் தொடங்கி முழுமை அடையும் போது சந்திரன் சிவப்பு நிறத்தில் ஒளிரத் தொடங்கும். இரவு 11.41 மணிக்கு முழுமையான சந்திர கிரகணம் நிகழும். இரவு 9.57 மணி முதல் நள்ளிரவு 12.22 மணி வரை, ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அலாஸ்கா, தென் அமெரிக்காவின் கிழக்கு பகுதி மற்றும் உலகின் பெருங்கடல்கள் மற்றும் துருவப் பகுதிகள் முழுவதும் இந்த நிகழ்வு தெரியும்.

புதுச்சேரியில் எய்ட்ஸ் தொற்றுள்ளவர்களின்

# குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை: முதல்வர் அறிவிப்பு

**புதுச்சேரி, ஆக. 13-**




எய்ட்ஸ் தொற்றுள்ள பெற்றோரின் குழந்தைகளுக்கு, பள்ளியில் படிப்போருக்கு ரூ.5,000, கல்லூரியில் படிப்போருக்கு ரூ.12,000 கல்வி உதவித் தொகையாக தரப்படவுள்ளது என்று கூறிய முதல்வர் ரங்கசாமி, எய்ட்ஸ் பாதித்தோரின் பயணப்படி ரூ.1000 ஆகவும் உயர்த்தப் படவுள்ளதாக கூறினார்.

நாடு முழுவதும் உள்ள பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்களுக்கு எச்.ஐ.வி-எய்ட்ஸ் மற்றும் பாலியல் நோய் பற்றிய தகவல்களை தெரிவிக்கும் விதமாக விவேகானந்தர் பிறந்த நாளான சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு, நேற்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அந்தந்த மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டன.

அதன்படி, புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் இரண்டு மாத எச்ஐவி-எய்ட்ஸ் தீவிர விழிப்புணர்வு பிரச்சார துவக்க விழா கம்பன் கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில், புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தலைமை தாங்கி விழிப்புணர்வு சுவரொட்டிகளை வெளியிட்டார். முன்னதாக கலைக்குழுவின் கூடிய பிரச்சார ஊர்தியையும் மாணவர்கள் விழிப்புணர்வு பேரணியையும் முதல்வர் ரங்கசாமி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

பின்னர் விழிப்புணர்வு நிகழ்வில் பேசிய முதல்வர் ரங்கசாமி கூறியதாவது: "பள்ளி படிப்பை முடித்து கல்லூரி செல்லும் போது சில மாற்றங்கள் குழந்தைகளுக்கு ஏற்படும். சில தீய பழக்கங்கள் சிலரால் ஏற்படுவதை கட்டுப்படுத்த வேண்டும். போதை பழக்கத்துக்கு ஆளாகிவிடக்கூடாது. சிலர் பணக்காரராக குழந்தைகளை கெடுக்கிறார்கள்.

எய்ட்ஸ் நோய் பாதித்தோருக்கு நல்ல சத்தான உணவு வழங்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, ரூ.1,250 மதிப்புள்ள சத்துணவு பெட்டகம் வழங்கப்படவுள்ளது. எய்ட்ஸ் தொற்றுள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்கு பள்ளி மற்றும் கல்லூரி படிப்பு செலவுக்கு உதவித் தொகை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பள்ளி அளவில் படிக்கும் மாணவர்களுக்கு தலா ரூ.5 ஆயிரமும், கல்லூரி அளவில் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ரூ.12 ஆயிரமும் தரப்படும். எய்ட்ஸ் நோயால் இறந்தவர்களின் குடும்பத்துக்கு இறுதிச் சடங்கு நடத்த உதவி தொகையாக ரூ.15 ஆயிரம் தரப்படும். இது விரைவில் செயல்படுத்தப்படும்" என்று புதுவை முதல்வர் ரங்கசாமி அறிவித்தார்.

குன்றத்தூர் அபிராமி மேல்முறையீடு:

# காவல்துறை பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஆக. 13-**



குன்றத்தூர் அபிராமி மேல்முறையீடு குறித்து காவல் துறை பதிலளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


குன்றத்தூர் அருகே உள்ள மூன்றாம் கட்டளைப் பகுதியைச் சேர்ந்தவர் விஜய் (30). இவர் தனியார் வங்கியில் பணி செய்து வருகிறார். இவர், அபிராமி (25) என்ற மனைவி, அஜய் (7) என்ற மகன், கார்னிகா (4) என்ற மகளுடன் வசித்து வந்தார். டிக்டாக்கில் பிரபலமாக இருந்த அபிராமிக்கும், அருகில் உள்ள பிரியாணி கடை ஒன்றில் பணி செய்து வந்த மீனாட்சி சுந்தரத்துக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பழக்கம் நாளடைவில் முறை தவறிய உறவாக மாறியது. இருவரின் விவாகரம் வெளியில் தெரியவர, அவர்களை வீட்டில் கண்டித்தனர்.

இதனைத் தொடர்ந்து அபிராமியின் கணவரையும், இரு குழந்தைகளையும் கொன்றுவிட்டு வீட்டை விட்டு வெளியேற அபிராமியும், மீனாட்சி சுந்தரமும் கடந்த 2018-ம் ஆண்டு முடிவு செய்தனர். இவர்கள் வீட்டை விட்டு வெளியேறியதால் மூவரும் தற்கொலை செய்து கொண்டனர் என்பதுபோல் காட்டுவதற்கான விஜய் மற்றும் குழந்தைகள் அஜய், கார்ணிகா ஆகியோருக்கு உணவில் தூக்க மாத்திரைகளை அதிகமாக கலந்து அபிராமி கொடுத்துள்ளார்.

இதில் குழந்தை கார்ணிகா மட்டுமே இறந்தார். மறுநாள் காலையில் விஜய் வேலைக்குச் சென்றுவிட்டார். மயக்க நிலையில் இருந்து குழந்தை அஜய்யை கழுத்தை நெறித்து கொன்றார். இதனைத் தொடர்ந்து மீனாட்சி சுந்தரம், அபிராமி இருவரும் கோயம்பேடு சென்று தென்மாவட்டத்தை நோக்கி பயணித்தனர். வீட்டுக்கு வந்த விஜய், குழந்தைகள் இருவரும் இறந்து கிடப்பதை பார்த்து குன்றத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்தப் புகாரைத் தொடர்ந்து விசாரித்த போலீஸார், இவர்கள் இறந்ததற்கும், அபிராமிக்கும் தொடர்பு இருப்பது தெரிந்து, அவரது செல்போன் சிக்னல் மூலம் பிடித்து விசாரித்தனர். அப்போது, இந்தக் கொலை சம்பவத்தில் மீனாட்சி சுந்தரத்துக்கும் தொடர்பு இருப்பது தெரிந்தது. இதனைத் தொடர்ந்து இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கு காஞ்சிபுரம் மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ப.உ.செம்மல். குற்றம்சாட்டப்பட்ட அபிராமி, மீனாட்சி சுந்தரம் இருவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். சிறப்பு நீதிமன்ற உத்தரவை ரத்து செய்யக்கோரியும், தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரியும் அபிராமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார். இந்த வழக்கு நீதிபதிகள், எம்.எஸ்.ரமேஷ், மற்றும் வி.லட்சுமி நாராயணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனு குறித்து காவல்துறை பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.

**13-08-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** கோபம் தவிர்த்து சிந்தித்து செயல்பட்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் காணலாம். மிகுந்த புத்திசாலிகள் போல் செயல்படுவர். பெண்களால் பணவிரயம் ஏற்படும்.

**ரிஷபம்:-** தன லாபத்துடன் எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். பிரிந்தவர்கள் ஒன்றுகூடி மகிழ்வர். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும்.

**மிதுனம்:-** எல்லாக் காரியங்களும் எதிர்பார்த்ததைவிட அனுகூலமாய் நடக்கும். தன்னம்பிக்கை, தைரியம், எல்லாம் ஓங்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

**கடகம்:-** மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள். பேச்சு வன்மையால் பெரும் சாதனைகள் புரிவார்கள். அரசு மற்றும் அரசியல்வாதிகள் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும்.

**சிம்மம்:-** ஒதுக்கி வைத்த உறவுகள், தங்கள் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்வர். முகஸ்துதிக்காக பாராட்டவும் செய்வார். மனைவியின் கலகத்தால் பாசமான பந்துக்கள் கூடப் பகைவர் ஆவர்.

**கன்னி:-** பலவழிகளிலும் தனவரவு கூடும். வீட்டிற்குத் தேவையான நவீன பொருட்களை வாங்கிக் குவிப்பீர்கள். புதிய காதல் ஏற்பட்டு அதனால் மகிழ்ச்சி ஏற்படும். புத்தாடை, ஆபரண வகைகள் சேரும்.

**துலாம்:-** ஆரோக்கியம் பெருகும். பயண சுகம் கூடும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். வியாபாரிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** சிரத்தையற்ற செயலால் திறமை இருந்தும் நல்ல பெயர் கிடைக்காது. சொல்பேச்சு கேட்காத பிள்ளைகளால் நிம்மதி குறையும். வியாபாரப் போட்டி காரணமாக போராடி வெற்றி பெறும் நிலை ஏற்படும்.

**தனுசு:-** தொழில் முதலீடுகளை கூடிய மட்டும் குறைப்பது நல்லது. வீட்டிலிருந்து வாகனத்தை நகர்த்துவதற்கு முன் அனைத்து பாகங்களையும் பரிசோதித்து எடுக்கவும்.

**மகரம்:-** வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் குவிப்பீர்கள். புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும். நேரத்தை வீணாக்காமல் தன்னம்பிக்கையுடன் படித்தால் தேரலாம்.

**கும்பம்:-** குடும்பத்தில் நிம்மதி அற்ற நிலை ஏற்படும். தொழிலில் இழப்பு ஏற்படும் என்று தெரிந்தும் அதிக முதலீடுகள் செய்யாதிருப்பது நல்லது. தீய வழிகளில் தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டியது வரும்.

**மீனம்:-** பெரிய மனிதர்களின் நட்பால் பெருமையடைவீர்கள். பணவரவு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும்

# தூய்மை பணியாளர்களுக்கு மாநகராட்சி வேண்டுகோள்

**சென்னை, ஆக. 13-**

தூய்மை பணியாளர்கள் உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை மாநகராட்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகளும், தொழில் தீர்ப்பாயத்தில் முறையீடுகளும் செய்யப்பட்டுள்ளதால், அவற்றின் மீது வரும் முடிவுக்குட்பட்டு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மண்டலம் 5 மற்றும் 6-ல் வசிக்கும் மற்றும் வந்து செல்லும் ஏறத்தாழ 20 லட்சம் பொதுமக்களுக்கான பொது சுகாதார சேவைகள் பாதிக்கப்படுவது மிக முக்கியமான பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. போராட்டம் தொடர்வதால் இந்த மண்டலங்களில் தூய்மைப் பணிகளில் தொய்வு ஏற்பட்டு குப்பைகள் தேங்கி மக்களுக்கு பெரும் சுகாதார பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

பணி, ஊதிய விவரங்கள் குறித்து விரிவாக தற்காலிக பணியாளர்களின் பிரிவினர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுவின் மூலமாக பணிகளை செய்து வந்த தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும். தனியார் நிறுவனம் பணியில் சேர்ப்பதையும் அவர்களுக்கு உரிய பணிப் பாதுகாப்பு மற்றும் பணப் பலன்கள் வழங்குவதையும் பெருநகர சென்னை மாநகராட்சி 100 சதவீதம் உறுதி செய்யும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் பொதுநலன் கருதியும், தங்களது பணிப் பாதுகாப்பு குறித்த உண்மை நிலையினை புரிந்து கொண்டும், உயர்நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பு மற்றும் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுகளை எதிர்நோக்கி, வேலை நிறுத்தத்தை கைவி ட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிந்து நதி நீர் ஒப்பந்தத்தில் விவகாரம்:

# இந்தியாவுக்கு பிலாவல் பூட்டோ மிரட்டல்

**இஸ்லாமாபாத், ஆக. 13-**



சிந்து நதி நீர் ஒப்பந்தத்தில் மாற்றங்களைச் செய்தால் இந்தியாவுக்கு எதிராக மற்றொரு சுற்று போர் தொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் மாதம் 22-ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா எடுத்தது. இதில் பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை ரத்து செய்தது. அதன்பின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை தாக்கி இந்தியா அழித்தது.

இதற்கிடையே சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தி வருகிறது. இதை இந்தியா ஏற்கவில்லை. இது தொடர்பாக பாகிஸ்தான் ராணுவ தளபதி அசீம் முனீர் கூறும்போது, சிந்து நதி குறுக்கே இந்தியா அணை கட்டினால் ஏவுகணைகளை வீசி அழிப்போம் என்று மிரட்டல் விடுத்தார். இதற்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்தது. பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு அமைச்சரும், பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவருமான பிலாவல் பூட்டோவும் இந்தியாவுக்கு மிரட்டல் விடுத்துள்ளார். சிந்து மாகாண அரசாங்கத்தின் கலாச்சாரத் துறை விழாவில் பிலாவல் பூட்டோ பங்கேற்று பேசியதாவது:-

சிந்து நதி நீர் ஒப்பந்தத்தில் மாற்றங்களைச் செய்தால் இந்தியாவுக்கு எதிராக மற்றொரு சுற்று போர் தொடுக்கப்படும். சிந்து நதி நீரை பாகிஸ்தானில் இருந்து திருப்பி விடுவது நாட்டின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் நாகரிகத்தின் மீதான தாக்குதல் ஆகும். இந்தியப் பிரதமர் மோடி சிந்து நதியின் மீது தாக்குதல் நடத்துவதாக அறிவித்தால், அவர் நமது வரலாறு, நமது கலாச்சாரம் மற்றும் நமது நாகரிகத்தைத் தாக்குகிறார் என்று அர்த்தம். எனவே, ஆபரேஷன் சிந்தூர் போன்ற தாக்குதலை நடத்த நீங்கள் நினைத்தால், பாகிஸ்தானின் ஒவ்வொரு மாகாணத்தின் மக்களும் உங்களுடன் சண்டையிடத் தயாராக உள்ளனர் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இது நீங்கள் நிச்சயமாக தோற்கும் ஒரு போராக இருக்கும். போர் ஏற்பட்டால் மோடியை எதிர்கொள்ளும் வலிமை பாகிஸ்தான் மக்களுக்கு உள்ளது. மற்றொரு போர் மூலம் பாகிஸ்தான் அதன் ஆறு நதிகளையும் மீட்டெடுக்க நேரிடும். பாகிஸ்தான் ஒருபோதும் தலைவணங்காது. இவ்வாறு அவர் கூறினார்.




சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழக அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகப் பணி தொகுதியில் உதவி ஆணையர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் சேகர்பாபு, முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்பழனி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'ஒரே நாடு ஒரே தேர்தல்' குழுஅறிக்கை:

# காலக்கெடுவை மேலும் நீட்டித்தது மக்களவை

புதுடெல்லி, ஆக. 13-

'ஒரே நாடு ஒரே தேர்தல்' குறித்த பாராளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கை தாக்கல் செய்ய கூடுதல் கால அவகாசம் வழங்க மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டின் அனைத்துத் தேர்தல்களையும் ஒரே காலகட்டத்தில் நடத்தி முடிக்கும் நோக்கில் அரசியலமைப்பு திருத்த (129வது திருத்த) மசோதா 2024, யூனியன் பிரதேச சட்டங்கள் திருத்த மசோதா 2024 ஆகிய இரண்டு மசோதாக்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதையடுத்து, இந்த மசோதாக்கள் பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. பி.பி. சவுத்ரி தலைமையிலான குழு, மசோதாக்கள் குறித்து ஆய்வு செய்து வருகிறது.

இந்நிலையில், இவ்விரண்டு மசோதாக்கள் மீதான அறிக்கையை தாக்கல் செய்ய கூடுதல் கால அவகாசம் அளிக்குமாறு பாராளுமன்ற மக்களவையில் கோரிக்கை வைத்தார். இது தொடர்பான தீர்மானம் மக்களவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "அரசியலமைப்பு (129வது திருத்த) மசோதா 2024, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2024 ஆகியவற்றின் மீது பாராளுமன்றக் கூட்டுக் குழு தனது அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இந்த ஆண்டில் வர உள்ள குளிர் கால கூட்டத் தொடரின் கடைசி வாரத்தின் முதல் நாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது" என்று பி.பி. சவுத்ரி தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் முறைகேடு விவகாரம்:

# பாராளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்




பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி.

புதுடெல்லி, ஆக. 13-

பாராளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வாக்காளர் பட்டியல் முறைகேடு பிரச்னை குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று திருச்சி சிவா வலியுறுத்தினார்.

பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து, பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக 'இந்தியா' கூட்டணியில் உள்ள எம்.பி.க்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதற்கிடையே, இதற்கு முந்தைய பாராளுமன்ற தேர்தல் மற்றும் மராட்டிய மாநில தேர்தல்களில் முறைகேடுகள் நடந்ததாக அதாவது வாக்குகள் திருடப்பட்டதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி புகார் கூறினார். இதனை 'வாக்குத்திருட்டு' என 'இன்டியா' கூட்டணி கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். இந்த பிரச்சினைகளுக்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என குரல் கொடுத்து வருகிறார்கள். இந்த விவகாரம் பாராளுமன்றத்திலும் எதிரொலித்து வருகிறது. நேற்று முன்தினம் தேர்தல் ஆணையம் நோக்கி பேரணியாக சென்ற இன்டியா கூட்டணி எம்.பிக்களை டெல்லி போலீசார் கைது செய்து பின்னர் விடுவித்தனர். இந்த நிலையில், டெல்லியில் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று இன்டியா கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கையில் பேனர்களை ஏந்தியபடி எம்.. பிக்கள் கோஷம் எழுப்பினர். சோனியா காந்தி, பிரியங்கா காந்தி, திமுக எம்.பி, டி ஆர் பாலு உள்ளிட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். பின்னர் பாராளுமன்றத்தின் அலுவல் நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் பங்கேற்றனர். மாநிலங்களவையில் விவாதம் கோரிய 21 நோட்டீசுகள் நிராகரிக்கப்பட்டது. இதற்கு தி.மு.க எம்.பி திருச்சி சிவா உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். நாட்டில் முக்கியமான வாக்காளர் பட்டியல் முறைகேடு பிரச்னை குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று திருச்சி சிவா வலியுறுத்தினார். அதேபோல, திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் டெரிக் ஓபிரையன் இதே பிரச்சினையை எழுப்பினார், ஆனால் அவரை தொடர்ந்து பேச அனுமதிக்கவில்லை. இதனைதொடர்ந்து உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவை 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. அதேபோல மக்களவையிலும் , பீகார் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணி தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் அவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# 'கூலி' திரைப்பட சிறப்பு காட்சிக்கு அரசு அனுமதி

சென்னை, ஆக. 13-

'கூலி' திரைப்படத்தின் சிறப்புக் காட்சிக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.

நடிகர் ரஜினிகாந்தின் 'கூலி' திரைப்படம் வருகிற 14-ம் தேதி ரிலீசாக இருக்கும்நிலையில், சிறப்புக் காட்சிக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கி இருக்கிறது. அதன்படி, ரிலீஸ் நாளில் முதல் காட்சி 9 மணிக்கு தொடங்கி இறுதிக் காட்சி நள்ளிரவு 2 மணிக்கு முடியும் வகையில் 5 காட்சிகளை திரையிடலாம் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

நடிகர் ரஜினிகாந்த் - இயக்குனர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் கூலி. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் அமீர் கான், சத்யராஜ், நாகர்ஜுனா, சவுபின் ஷாஹிர், ஸ்ருதிஹாசன் மற்றும் உபேந்திரா ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படம் ரஜினியின் சினிமா வாழ்க்கையில் ஒரு மைலகல்லாக இருக்கும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

# அ.தி.மு.க. சார்பில் ஆவடியில் வரும் 22-ம் தேதி ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



சென்னை, ஆக. 13-

ஆவடியில் வருகிற 22-ம் தேதி தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

திருவள்ளூர் தெற்கு மாவட்டம், ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் குப்பைகள் சரிவர அள்ளப்படுவதில்லை; பாதாள சாக்கடை முறையாக அமைக்கப்படவில்லை; கொசு மருந்து முமையாக அடிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக மக்கள் பல்வேறு சுகாதார சீர்கேடுகளால் அவதியுற்று வருகின்றனர்.

மக்களின் வாழ்வாதார வசதிகளை செய்து தராத நிலையில் வீட்டு வரி கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், இங்குள்ள கடைகளுக்கு குப்பை வரியும் விதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஏழை, எளிய, நடுத்தர மக்களும், வியாபாரிகளும் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

இந்நிலையில், திருவள்ளூர் தெற்கு மாவட்டம், ஆவடி மாநகராட்சியில் நிலவி வரும் சுகாதார சீர்கேடுகளையும், நிர்வாக சீர்கேடுகளையும், கண்டும் காணாமலும் இருந்து வரும் திமுக ஸ்டாலின் மாடல் அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும்; மக்களின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிட வலியுறுத்தியும், அ.தி.மு.க. திருவள்ளூர் தெற்கு மாவட்டத்தின் சார்பில், வருகிற 22-ம் தேதி (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில், ஆவடி மாநகராட்சி எம்.ஜி.ஆர். திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், மகளிர் அணிச் செயலாளரும், செய்தித் தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான பா. வளர்மதி தலைமையிலும்; சிறுபான்மையினர் நலப்பிரிவுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.அப்துல் ரஹீம், அமைப்புச் செயலாளர் திருவேற்காடு பா. சீனிவாசன், திருவள்ளூர் தெற்கு மாவட்டக் ச் செயலாளர் வி. அலெக்சாண்டர், முன்னாள் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், திருவள்ளூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சார்பு அணிகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி, நகரச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் செயலாளர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், மாநகராட்சி, நகராட்சி மன்ற இந்நாள், முன்னாள் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலனில் சிறிதும் அக்கறை இல்லாத திமுக ஸ்டாலின் மாடல் அரசையும்; ஆவடி மாநகராட்சி நிர்வாகத்தையும் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 24 மணிநேரத்தில் 25 லட்சம் பேர்:

# வாக்குத்திருட்டு விவகாரத்தில் ராகுலுக்கு பெருகும் ஆதரவு

டெல்லி, ஆக. 13-

வாக்குத் திருட்டு விவகாரத்தில் 24 மணிநேரத்தில் 25 லட்சம் பேர் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

கடந்த மக்களவைத் தேர்தலில் தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் மத்தியில் ஆளும் பாஜக 'வாக்குத் திருட்டில்' ஈடுபட்டதாக சில நாள்களுக்கு முன் குற்றஞ்சாட்டிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, கர்நாடக வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடைபெற்றதாக சில 'ஆதாரங்களையும்' வெளியிட்டார். அதேநேரம், ராகுல் வெளியிட்ட தரவுகள் தவறானவை என்று தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்தது.

இதனிடையே, டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை உடனடியாக வெளியிட தேர்தல் ஆணையத்துக்கு ராகுல் காந்தி வலியுறுத்தியிருந்தார். மேலும், ஜனநாயகத்தைக் காப்பதற்கான போராட்டத்தில் பங்கேற்று, http://votechori.in/ecdemand என்ற இணையதளத்தை அணுகலாம் என்றும் 9650003420 என்ற எண்ணிற்கு மிஸ்டு கால் கொடுக்கலாம் என்றும் ராகுல் காந்தி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ராகுல் காந்தி கோரிக்கை விடுத்த 24 மணிநேரத்தில் மட்டும் 15 லட்சம் பேர் ஆதரவு சான்றிதழை பதிவிறக்கம் செய்துள்ளனர். மேலும், 10 லட்சம் பேர் மிஸ்டு கால் மூலம் ஆதரவு அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வாக்காளர் பட்டியலில் முறைகேடு:

# மக்களவையை கலைக்க வேண்டும்: திரிணமூல் காங்.,

புதுடெல்லி, ஆக. 13-

வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்திருந்தால் ஒட்டுமொத்த மக்களவையையும் கலைக்க வேண்டும் என்று திரிணமூல் காங்கிரஸின் மக்களவை குழுத் தலைவர் அபிஷேக் பானர்ஜி தெரிவித்துள்ளார்.

குஜராத் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களிலும் ஒரே எண்ணை கொண்ட வாக்காளர்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்காமல் தேர்தல் ஆணையம் தவிர்த்து வருவதாக அவர் குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார். மக்களவை தேர்தலின் போது வாக்காளர் பட்டியலில் முறைகேடு செய்யப்பட்டு, வாக்குத் திருட்டு நடைபெற்றதாக குற்றம்சாட்டிய ராகுல் காந்தி, கடந்த வாரம் ஆதாரங்களை வெளியிட்டார்.

இதேபோன்று, மகாராஷ்டிரம், ஹரியாணா உள்ளிட்ட சட்டப்பேரவை தேர்தல்களிலும் முறைகேடு நடைபெற்றதாக அவர் குற்றச்சாட்டை எழுப்பினார். இந்த குற்றச்சாட்டு குறித்து செய்தியாளர்களுடன் செவ்வாய்க்கிழமை அபிஷேக் பானர்ஜி பேசியதாவது: "தில்லியில் நேற்று ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் போராட்டம் நடத்திய பெண் எம்பிக்கள் உள்பட எதிர்க்கட்சி எம்பிக்களிடம் தில்லி காவல்துறையினர் நடந்துகொண்ட விதம், தேர்தல் ஆணையத்தின் பயத்தை தெளிவாகக் காட்டுகிறது.

குஜராத் மற்றும் மேற்கு வங்கத்தில் ஒரே எண் (EPIC) கொண்ட வாக்காளர்கள் எப்படி இருக்கிறார்கள்? வெவ்வேறு வாக்குச் சாவடிகளில் ஒரே பெயரில் வாக்காளர்கள் எப்படி இருக்கிறார்கள்? என்பதற்கு பதிலளியுங்கள். வாக்காளர் பட்டியலில் பிழை இருப்பதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. இதே பட்டியலின் அடிப்படையில்தான், நாட்டின் பிரதமர், அமைச்சர்கள், 240 பாஜக எம்பிக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த பட்டியலில் முறைகேடு இருந்தால், முழு மக்களவையையும் மத்திய அரசையும் கலைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

கண் தானம் செய்வீர்

# தூய்மை பணியாளர்களுக்கு எதிராக அரசு செயல்படுகிறதா?

## ஐகோர்ட்டில் அரசு தரப்பில் விளக்கம்

சென்னை, ஆக. 13-

தூய்மை பணியாளர்களுக்கு எதிராக அரசு செயல்படுகிறதா என ஐகோர்ட்டு விளக்கம் அளித்துள்ளது.

சென்னை மாநகராட்சியின், 5 மற்றும் 6-வது மண்டலங்களில் ரூ.276 கோடி தூய்மைப்பணி ஒப்பந்தத்தை தனியார் நிறுவனத்துக்கு வழங்கி, கடந்த ஜூன் 16-ந்தேதி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் பில்டிங் அருகில் தூய்மைப் பணியாளர்கள், 10 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், இந்த போராட்டத்தை சட்டவிரோதம் என்று அறிவிக்க கோரி தொடரப்படும் வழக்கை அவசர வழக்காக கருதி உடனே விசாரணைக்கு ஏற்க வேண்டும் என்று தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவச்தவா, நீதிபதி சுந்தர்மோகன் முன்பு நேற்று முன்தினம் காலையில் வக்கீல் வினோத் என்பவர் முறையிட்டார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், வழக்கை தாக்கல் செய்தால், நேற்று விசாரிப்பதாக கூறியிருந்தனர்.

ஆனால், நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை. இதையடுத்து, தலைமை நீதிபதி அமர்வில் வக்கீல் ஆஜராகி, மீண்டும் நேற்று முன்தினம் வைத்த கோரிக்கையை முன் வைத்தார். அதற்கு நீதிபதிகள், நீங்கள் தாக்கல் செய்த மனுவில் குறைபாடுகள் உள்ளதாக பதிவுத்துறை கூறியுள்ளது. இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய மனு தாக்கல் செய்தார், அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றனர். அப்போது குறுக்கிட்ட அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன், தூய்மை பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு முழு ஆதரவாக உள்ளது. ஆனால், தூய்மை பணியாளர்களுக்கு எதிராக அரசு செயல்படுவது போல ஒரு போலி பிம்பத்தை சிலர் ஏற்படுத்துகின்றனர் என்றார்.

# தங்கம் விலை 2-வது நாளாக சரிவு

சென்னை, ஆக. 13-

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை செவ்வாய்க்கிழமை காலை சவரனுக்கு ரூ.680 குறைந்து விற்பனையானது. கடந்த இரண்டு நாள்களில் மட்டும் தங்கத்தின் விலை ரூ.1200 குறைந்து விற்பனையாகிறது.

இந்த மாதத் தொடக்கத்தில் இருந்தே தங்கம் விலை ஏற்ற இறக்கத்தை சந்தித்துவருகிறது.

அதன்படி, இந்த வாரத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் சென்னையில் ஆபரணத் தங்கம் விலை குறைந்திருந்த நிலையில், நேற்றும் (ஆக.12) கிராமுக்கு ரூ.80 குறைந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.9,295-க்கு விற்பனையானது. அதேசமயம் சவரனுக்கு ரூ.640 குறைந்து, ஒரு சவரன் தங்கம் ரூ.74,360க்கு விற்பனையானது.

கடந்த இரண்டு நாள்களில் மட்டும் தங்கத்தின் விலை ரூ.1200 குறைந்துள்ளதால், இல்லத்தரசிகளும், தங்க முதலீட்டாளர்களும் சற்று நிம்மதியடைந்துள்ளனர். வெள்ளி விலையில் கிராமுக்கு ரூ.1 குறைந்து ஒரு கிராம் ரூ.126-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ. 1,26,000க்கும் விற்பனையானது.

### 2024-ம் ஆண்டு பிப்ரவரியில் இருந்து

# ஒரு யானை கூட ரயில் அடிபட்டு இறக்காமல் காப்பாற்றியுள்ளோம்

## உலக யானைகள் நாளில் முதல்வர் ஸ்டாலின் பதிவு

சென்னை, ஆக. 13-

2024-ம் ஆண்டு பிப்ரவரியில் இருந்து ஒரு யானை கூட ரயில் மோதி இறக்காமல் காப்பாற்றியுள்ளோம் என்று உலக யானைகள் நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்

உலக யானைகள் நாளை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் கூறி இருப்பதாவது:-

உலக யானைகள் நாளில், தமிழ்நாட்டின் இயற்கை மரபையும் வரலாற்றையும் செழுமைப்படுத்துவதில் யானைகளின் அளப்பரிய பங்கினைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்போம்.

அண்மையில், தெப்பக்காட்டில் யானைப் பாகர்களுக்கான கிராமத்தையும் நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தொடங்கி வைத்தேன்.

கோவையில், ஒன்றிய வனத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் யானைகள் நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, மதுக்கரையில் நாம் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு எச்சரிக்கை அமைப்பைப் பார்வையிட உள்ளார்.

இந்த அமைப்பின் மூலம் 2,800 முறை யானைகள் ரயில் தண்டவாளத்தைப் பாதுகாப்பாகக் கடந்து சென்றுள்ளன. இதனால் 2024-ம் ஆண்டு பிப்ரவரியில் இருந்து ஒரு யானை கூட ரயில் மோதி உயிரிழக்காமல் காப்பாற்றியுள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது யானைகளை அக்கறையோடு பராமரிக்கும் பாகர்களுக்கான சுற்றுச்சூழலோடு இயைந்த வீடுகளை அது கொண்டுள்ளது. யானைகளைப் பாதுகாப்பதோடு யானைப் பாகர்களின் நலனையும் இது மேம்படுத்துகிறது.

இனி வரும் காலங்களிலும் யானைகள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திகழச் செய்ய இந்நாளில் உறுதியேற்போம். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# நாமே முதன்மை சக்தி என்று உலகுக்கு உணர்த்துவோம்

## மதுரை மாநாட்டுக்கு விஜய் அழைப்பு

சென்னை, ஆக. 13-

'மதுரையில் நம்ம கொள்கை எதிரியையும், அரசியல் எதிரியையும் சமரசமே இல்லாம எதிர்த்து வென்று தமிழ்நாட்டு மக்களுக்கான நல்லாட்சியை நிறுவுவதே நம்ம குறிக்கோள். மாற்று சக்தி நாமன்று, முதன்மை சக்தி நாம் என்பதை உலகுக்கு மீண்டும் உணர்த்துவோம்' என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்களுக்கு வணக்கம். நம்மோட அரசியல் பயணத்தில் அடுத்தடுத்த கட்டங்களைத் தாண்டி வர்றோம். இடையில எத்தனை சவால்கள், நெருக்கடிகள் வந்தாலும் எல்லாத்தையும் மக்கள் சக்தியோட அதாவது உங்க ஆதரவால கடவுளோட அருளால கடந்து வந்துகிட்டே இருக்கோம்.

வர 2026 சட்டமன்ற தேர்தலுக்கு நாம முழு பேச்சில் தயாராகிட்டு வர்றோம். இந்த சூழலில் நம்முடைய இரண்டாவது மாநில மாநாட்ட ஆகஸ்ட் 21-ம் தேதி மதுரை பாரப்பத்தியில நாம நடத்த இருக்கிறது உங்க எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

முத்தமிழையும் சங்கம் வச்சு வளர்த்த மதுரையில, நம்ம கொள்கை எதிரியையும், அரசியல் எதிரியையும் சமரசமே இல்லாம எதிர்த்து நின்னு, ஜனநாயகப் போரில் அவங்கள வென்று தமிழ்நாட்டு மக்களுக்கான நல்லாட்சியை நிறுவுவதே நம்ம குறிக்கோள் என்ற நிலைப்பாட்டை உறுதி செய்வது தான் இந்த மாநாடு. அதனாலதான் வைகை மண்ணில் நடக்கும் இந்த மாநாடு, 'வாகை சூடும் வரலாறு திரும்புகிறது: வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு' என்ற தேர்தல் அரசியல் மையக்கருத்த முன்வச்சி நடக்க இருக்குதுன்னு உங்களோட பகிர்ந்து கொள்வதில் ரொம்ப மகிழ்ச்சி.

மாநிலம் அதிர மாநாட்டுக்கு தயாராகும் மாற்று சக்தி நாமன்று, முதன்மை சக்தி நாம் என்பதை உலகிற்கு மீண்டும் உணர்த்துவோம்' எனத் தெரிவித்துள்ளார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



தெருநாய்களை ஒட்டுமொத்தமாக அகற்றுவது கொடூரமானது, குறுகிய பார்வை கொண்டது, இரக்கமற்றது.பொது மக்களின் பாதுகாப்பும் விலங்குகளின் நலனும் ஒன்றிணைந்து செயல்படுவதை நாம் உறுதி செய்ய முடியும். இந்த விவகாரத்தில் உரிய விதிகளை கடைபிடிக்க வேண்டும்.

- ராகுல் காந்தி



தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான இந்த ஆணவ படுகொலைகள் நடக்கிறபோது பெரிய கட்சிகளும், புதிய கட்சிகளும் வாய் திறப்பதில்லை. த.வெ.க. தலைவர் நடிகர் விஜய், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியால் இந்த ஆணவ படுகொலையை கண்டித்து குரல் கொடுக்காதது ஏன்?.

- திருமாவளவன்



ம.தி.மு.க. ஒருபோதும் பதவிக்காக கூட்டணி வைத்தது இல்லை. கொள்கைக்காகவே கூட்டணி வைப்போம். கூட்டாட்சி தத்துவம் மட்டும்தான் இந்தியாவை பாதுகாக்கும். மதச்சார்பின்மை தான் இந்தியாவை வளர்க்கும். இந்து-முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்க பொதுசிவில் சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சியையும் பா.ஜ.க .எடுத்து வருகிறது.

- வைகோ



கேப்டன் விஜயகாந்த் அவருடைய கொள்கை, கோட்பாடுகளை வழி நடத்த எங்களை விட்டுச்சென்றுள்ளார். எனவே வருகிற சட்டசபை தேர்தலில் கேப்டனின் தே.மு.தி.க. கட்சி வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய வேண்டும். 2026 சட்டசபை தேர்தலில் மக்கள் விரும்பும் கூட்டணியை அமைப்போம்.

- பிரேமலதா

# முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று ரேசன் பொருட்கள்

## நீலகிரியில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார்



**ஊட்டி, ஆக.13-**

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னையில் நேற்று (12.08.2025) தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில், அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், ஊட்டி புதுமந்து பகுதியில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கினார். பின்னர், அரசு தலைமைக்கொறடா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்ற நோக்கத்தில், அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைய தினம், தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து. நமது மாவட்டத்தில், நானும், மாவட்ட கலெக்டர் மற்றும் ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் நேரில் சென்று ஊட்டி நகராட்சிக்குட்பட்ட புதுமந்து நியாய விலைக்கடையில் ரேசன் பொருட்கள் பெறும் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கு நேரடியாக சென்று பொது விநியோக திட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினோம்.

நீலகிரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் 412 நியாய விலை கடைகள் இயங்கி வருகிறது. இதில் 323 முழு நேர நியாய விலை கடைகளும், 89 பகுதி நேர நியாய விலை கடைகளும் (44 நடமாடும் நியாய விலை கடைகள்) இயங்கி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் 2,19,772 குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம் சிறப்பு கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவு பாதுகாப்பையும் உறுதி செய்யும் இத்திட்டத்தின் வாயிலாக, நீலகிரி மாவட்டத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 270 கிளஸ்டர்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 391 நியாய விலைக்கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தகுதி வாய்ந்த 15,369 குடும்ப அட்டைகளில் 1,150 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கும், 70 வயதிற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் 17,974 பயனாளிகள் மற்றும் 18 வயதிற்கு கீழ் உள்ள 205 பயனாளிகள் என மொத்தம் 19,329 பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டுறவு துறையின் சார்பில், பொது விநியோக திட்டத்தின் கீழ் அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படும் என்றார்.

முன்னதாக, அரசு தலைமைக்கொறடா முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்; தின் ரேசன் பொருட்கள் எடுத்துச்செல்லும் வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இரா.தயாளன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், துணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம்) கமல் சேட், ஊட்டி வட்ட வழங்கல் அலுவலர் லதா, ஊட்டி நகர் மன்ற தலைவர் வாணீஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் உடனிருந்தனர்.

# முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகப் பொருட்கள்: அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்

**ஈரோடு,ஆக.13-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகரில் இன்று (12.8.2025) முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், திண்டல் நகர கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்படும் புதுக்காலனி நியாயவிலைக்கடைக்குட்பட்ட காரப்பாறை பகுதியில் கூட்டுறவுத் துறை சார்பில், குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகப் பொருட்களை வழங்கினார்.வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிபொறுப்பேற்ற பிறகு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டினை முன்மாதிரி மாநிலமாக உயர்த்தி உள்ளார்கள். அந்த வகையில் தற்போது அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடு தேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய எண்ணத்தின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" செயல்படுத்தி உள்ளார்கள்.

இத்திட்டத்தின் கீழ் மக்கள் நலன் சார்ந்த சிறப்பு கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். மேலும், இத்திட்டத்தின் வாயிலாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள 1263 நியாயவிலைக்கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 81,792 குடும்ப அட்டைகளில் 99,218 பயனாளிகள் 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் 2,735 பயனாளிகள் மாற்றுத் திறனாளிகள் ஆக மொத்தம் 1,01,953 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.



இத்திட்டத்தில் பயன் பெற தகுதியுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் பயனாளர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்னணு எடைத்தராசு, விற்பனை முனைய இயந்திரம் (e-POS) உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர். 70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்கு இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் கலெக்டர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி துணை மேயர் வே. செல்வராஜ், 3 வது மண்டல குழுத்தலைவர் சசிக்குமார், ஈரோடு மாவட்ட நுகர்பொருள் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் த.செல்வக்குமரன், துணைப்பதிவாளர் / பொது விநியோகத்திட்டம் சு.மாதேஸ், துணைப்பதிவாளர் ஈரோடு சரகம் ஜி.காலிதா பானு, துணைப்பதிவாளர் / பணியாளர்கள் அலுவலர் பா.ரவிச்சந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார் உட்பட சங்க செயலாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**ஈரோடுமாவட்டம்,சென்னிமலைஊராட்சிஒன்றியம்,புதுப்பாளையம்ஊராட்சிஅங்காளம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் .சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.**

# மாநில அளவிலான யோகசனப் போட்டியில் வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி மாணவியர் சாதனை



**ஈரோடு ஆக 13-**

சுவாமி விவேகானந்தா யோகாசன சங்கத்தினர் மாநில அளவிலான யோகாசனப் போட்டிகளை ஈரோடு பப்ளிக் பள்ளியில் கடத்தினர். 420க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி மாணவியர் எஸ். பிரதக்ஷனா முதல் வகுப்பு, எ. ஷிவண்யா இரண்டாம் வகுப்பு, எஸ். ஆருத்ரா நான்காம் வகுப்பு, எ. மஹதி ஆறாம் வகுப்பு, எம்.சுபகாமாட்சி ஒன்பதாம் வகுப்பு யோகாசன சாதனை புரிந்து முதல் பரிசு பெற்றனர். சிறப்புப் பிரிவில் எம்.சுபகாமாட்சி ஒன்பதாம் வகுப்பு மாணவி முதல் பரிசு பெற்றுள்ளார். வெற்றி பெற்ற மாணவிகளைப் பள்ளியின் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர், முதல்வர் வி. லதா, நிர்வாக அலுவலர் எல். சென்னியப்பன் மற்றும் ஆசிரியைகள் பாராட்டிக் கௌரவித்தனர்

# ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



**ஈரோடு ஆக 13-**

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி நிர்வாகிகள ஆலோசனைக் கூட்டம் மாவட்ட திமுக அலுவலகத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் தமிழ்நாடுவீட்டுவசதி நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கி.ரகுராம், எஸ்.சதீஷ்குமார், எஸ்.எஸ்.விஜயராஜன், இரா. நித்தின் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது கூட்டத்தில் ஈரோடு கிழக்கு எம் எல்ஏ வி.சி. சந்திரகுமார் மாவட்ட நிர்வாகிகள் ஆ. செந்தில்குமார் செல்லப்பொன்னி பி.கே. பழனிசாமி ஈரோடுமாநகர திமுக செயலாளர் மு.சுப்பிரமணியம் திமுக பொதுக்குழு உறுப்பினர் கதிரம்பட்டி மகாலிங்கம் உள்ளிட்ட ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர் கூட்ட ஏற்பாடுகளை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் செய்திருந்தார்

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



ஈரோடு ஆக 13-

விற்பனையாளர் டி வி ஆர் கம்பெனி மற்றும் டால்மியா சிமெண்ட் இணைந்து 2025 சுதந்திர தினத்தினை முன்னிட்டு மக்களிடையே போதை ஒழிப்பு விழிப்புணர்வினை சேர்த்திட நேற்று திண்டல் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளை இணைத்து போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. அப்பேரணியை நல்ல முறையில் நடத்திட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், தலைவர் குமாரசாமி,பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் .குருமூர்த்தி ,உள்ளாட்சிப்பிரதிநிதிகள் .கோகிலவாணி மணிராசு, .கீர்த்தனா பிரவீன் மற்றும் தலைமையாசிரியர் .முனைவர்.செ.சிவகாமி ,ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் ,பெற்றோர்கள் கலந்துகொண்டனர். இவர்களுடன் சிமெண்ட் விற்பனையாளர் டி வி ஆர் கம்பெனி உரிமையாளர் ஈஸ்வரமூர்த்தி மற்றும் டால்மியா சிமெண்ட் வர்த்தக மேலாளர் வெங்கடேஷ் மற்றும் பணியாளர்கள் சசிகுமார் கணேசன் சுரேந்தர் ஆகியோர்கள் கலந்து கொண்டு பேரணியை நடத்தப்பட்டது. மேலும் பள்ளியில் பயிலும் 640 மாணவர்களுக்கும் டால்மியா சிமெண்ட்ஸ் மற்றும் டிவி ஆர்நிறுவனத்தின் வாயிலாக தண்ணீர் பிளாஸ்க் மற்றும் 317 மாணவர்களுக்கு பெல்ட் வழங்கப்பட்டது.

<u>நீலகிரி மாவட்டத்தில்</u>

# இ- நாம் திட்டத்தில் 14-ந் தேதி முதல் ஏலம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

**ஊட்டி, ஆக.13-**

நீலகிரி மாவட்ட கலெக்டர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது-

விவசாயிகள் பயன் பெறும் வகையில் மத்திய அரசால் மின்னணு தேசிய வேளாண் சந்தைதிட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை இணையம் மூலம் ஒருங்கிணைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகவிலை கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில் இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது 157 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இ-நாம்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் மற்றும் ஊட்டி ஆகிய 2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இ-நாம் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இ-நாம் முறையில் ஏல நடைமுறைகள்அனைத்தும் மின்னணுமுறையில் இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படுவதால், பிறமாவட்டம், பிற ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இருந்தும் வணிகர்கள் பங்கேற்று ஏலம் கோர முடியும் என்பதுடன துல்லியமான தர அளவுகள் உறுதி செய்யப்படுவதால் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைக்கின்றது. தொகை நேரடியாக விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவாக்கப்பட்டு வருகின்றது. மேலும் இ-நாம் திட்டத்தில் பண்ணைவாயில் வணிகம் என்ற முறை அரசால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு எடுத்து வருவதற்கான ஏற்றுக்கூலி, போக்குவரத்து செலவினங்களை முழுமையாக குறைத்திடும் நோக்கில் விவசாயிகளின் இருப்பிடம் ஃ தோட்டத்திற்கே ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலர்கள் நேரில் சென்று, இ-நாம் செயலி மூலம் விளைபொருட்களை விற்பனை செய்து தருவதுடன், பணம் நேரடியாக விவசாயிகளின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படுவதை உறுதி செய்யும் வழியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.நீலகிரிமாவட்டம், கோத்தகிரி தாலுக்கா, எடப்பள்ளி ஊராட்சி, பெட்டடி சுங்கம் பகுதியில் செயல்பட்டு வரும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 14.08.2025 வியாழக்கிழமை முதல் இ-நாம் முறையில் ஏலம் நடத்தப்பட உள்ளது. மேலும் பிரதிவாரம் (வியாழக்கிழமை) தோறும் பூண்டு ஏலம் நடத்தப்பட உள்ளது. நீலகிரிமாவட்ட விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்களால் விளைவிக்கப்படும் பூண்டினை விற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, நீலகிரிமாவட்ட விவசாயிகள் அனைவரும் மேற்கண்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைஅணுகி இ-நாம் மற்றும் பண்ணைவாயில் வணிகம் மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் விளைபொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்து பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பயிற்சி



**ஈரோடு ஆக 13-**

மத்திய அரசின் கேவி ஐ சி மூலம் ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை பகுதிகளில் உள்ள மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பயிற்சி வகுப்பை கே வி ஐ சி உதவி இயக்குநர் சித்தார்த்தன் முன்னிலையில் ஈரோடு மாவட்ட மண்பாண்ட தொழிலாளர்கள் குலாலர் சங்கத்தின் தலைவர் எஸ்.கனகராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துவங்கி வைத்தார் மேலும் இந்நிகழ்வில் மாவட்ட கல்வி பரிசளிப்பு விழா அறக்கட்டளை தலைவர் கா.பா.ஆறுமுகம் , மாவட்ட துணை தலைவர் மணி . மாவட்ட துணை செயலாளர் சுப்பிரமணி, மூர்த்தி, கொழந்தசாமி, பிரகாஷ், பெரியசாமிஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.பத்துநாள் பயிற்சி வகுப்பு முடிந்து மின்சார சக்கரம் இலவசமாக வழங்கப்படும்.ஆர்வத்துடன் மண்பாண்ட தொழிலாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை**

# பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு பி.இ, பி.டெக், பி.ஆர்க் பாட வகுப்புகள் தொடக்க விழா




**ஈரோடு ஆக 13-**

பெருந்துறைகொங்குபொறியியல்கல்லூரியில் 42வது முதலாமாண்டுபி.இ மற்றும்பி.டெக், மற்றும் 11 வதுமுதலாமாண்டுபி.ஆர்க்பாடவகுப்புகள்தொடக்கவிழநடைபெற்றது. இவ்விழாவில், வி. உதய சங்கர், இயக்குநர், நாஸ்காம், இணை நிறுவனர், மாற்றம்நிறுவனம், சென்னைசிறப்புவிருந்தினராகபங்கேற்று சிறப்புரையாற்றினார். மேலும்இவ்விழாவில்கொங்குவேளாளர்தொழில்நுட்பக்கல்விஅறக்கட்டளையின்தலைவர்மருத்துவர்ஆர்.குமாரசாமி,செயலாளர் பி. சத்தியமூர்த்தி, பொருளாளர் கே. வி. ரவிசங்கர், பாரம்பரிய உறுப்பினர்கள் பி. சி. பழனிசாமி, ஆர்.எம். தேவராஜா,. வெங்கடாச்சலம், .ஈ.ஆர்.கே. கிருஷ்ணன்பி.டி.தங்கவேலு, கல்லூரியின்தாளாளர்.ஏ.கே.இளங்கோ, முதல்வர்முனைவர். ஆர். பரமேஸ்வரன் ஆகியோர்கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

முதலாமாண்டுமாணவர்களுக்குநான்குநாட்களுக்குபுத்தாக்கப்பயிற்சிநடத்ததிட்டமிடப்பட்டுஉள்ளது. இப்பயிற்சியில்பொறியியல்படிப்பின்முக்கியத்துவம், வேலைவாய்ப்பு, யோகா, உணவுப்பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி, மனிதநேயம்மற்றும்கல்லூரியின்செயல்பாடுகள்குறித்துவிளக்கப்படஉள்ளது. பயிற்சிவகுப்புகளுக்குபிறகு19.08.2025முதல்,முதலாமாண்டுபாடவகுப்புகள்தொடங்கப்படஉள்ளன. .

**மழைநீர் உயிர்நீர்**

## பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 2,100 கன அடி நீர் திறப்பு

ஈரோடு, ஆக.13-

ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணை மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெற்று வருகின்றன. நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி பகுதியில் பலத்த மழை பெய்ததால் கடந்த மாதம் 27-ம் தேதி 32 -வது முறையாக பவானிசாகர் அணை 100 அடியை எட்டியது. . இந்நிலையில் மீண்டும் மழை பெய்ததால் நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. இதனால் பவானிசாகர் அணை 101 அடியை எட்டியது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக பவானிசாகர் நீர் பிடிப்பு பகுதியில் மீண்டும் பலத்த மழை பெய்து வருவதால் அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

நேற்று காலை பவானிசாகர் அணை நீர்மட்டம் 101. 80 அடியில் தொடர்ந்து நீடித்து வருகிறது. அணைக்கு வினாடிக்கு 1,897 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 2100 கன அடியாக அதிகரித்து திறக்கப்பட்டுள்ளது. தடப்பள்ளி -அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் என மொத்தம் 3,000 கன அடி நீர் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டு வருகிறது.

எந்த நேரத்திலும் 102 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு எட்டினால் மீண்டும் பவானிசாகர் அணையிலிருந்து உபரிநீர் பவானி ஆற்றுக்கு திறந்து விடப்படும் வாய்ப்பு உள்ளதால் பவானி ஆற்றங்கரை பகுதி மக்களுக்கு ஏற்கனவே 2-ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 20 அடியாக உள்ளது. பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 13.81அடியாக உள்ளது. வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 22.10 அடியாக உள்ளது. ஒருபுறம் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில் மற்ற அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

## ஈரோடு புத்தகத் திருவிழாவின் ஒன்பதாம் நாள் சிந்தனை அரங்க நிகழ்வு



ஈரோடு ஆக 13-

21 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவின் ஒன்பதாம் நாள் சிந்தனை அரங்க நிகழ்வு 10.08.2025 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு வி.வி.நேஷனல் மோல்டட் பர்னிச்சர் நிறுவனத்தின் இயக்குநர் விவேக் கார்த்தி தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புடன் கூடிய அறிமுக வுரை நிகழ்த்தினார்.

புதிய தலைமுறை தொலைக்காட்சியின் மூத்த ஆசிரியர் ரா.விஜயன் 'எண்ணம் போல் வாழ்க்கை ...' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். புதுடில்லி இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையின் இயக்குநர் கி. அமர்நாத் இராமகிருஷ்ணா 'சங்கத் தமிழின் தொன்மை' என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட நகரின் முக்கியப் பிரமுகர்கள், அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.

## ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரிக்கு மாநில அளவில் முதல் பரிசு



ஈரோடு ஆக 13-

இளைய சமுதாயத்தை போதை பழக்கத்திலிருந்து விடுபட வைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தியதற்காக ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரிக்கு தமிழ்நாடு அரசு மாநில அளவிலான முதல் பரிசை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் படி, உயர்கல்வி நிறுவனங்கள் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சென்ற 2024-2025 ஆம் கல்வியாண்டில் ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினரிடையே அதிகப்படியான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி சமூக மேம்பாட்டை ஏற்படுத்த முனைந்தது.அதற்காக கல்லூரியின் போதைப் பொருள் தடுப்பு மன்றம் (Anti-Drug Club) தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான முதல் பரிசினைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதற்காக சென்னையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் பரிசு தொகை ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை, பரிசுப் பத்திரம் மற்றும் கோப்பையும் கல்லூரியின் முதல்வர் ஹ.வாசுதேவன், போதைப் பொருள் தடுப்பு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் து.ஆர்.ராஜாகுமார் மற்றும் கல்லூரி மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பாகச் செயலாற்றி பரிசு பெறுவதற்கு காரணமாக இருந்த கல்லூரியின் தாளாளர் பி.டி.தங்கவேல், கல்லூரி முதல்வர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என அனைவரையும் கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்வி அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பாராட்டினர்.



தமிழ்நாடு அரசு மக்கள் சிந்தனை பேரவை இணைந்து நடத்தும் ஈரோடு புத்தகத் திருவிழா நிறைவு நாளில் மக்கள் சிந்தனை பேரவை 25 வது ஆண்டு விழா மலரை முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு வெளியிட மாவட்ட கலெக்டர் கந்தசாமி பெற்றுக் கொண்டார். உடன் யூ ஆர் சி மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளி செயலாளர் தேவராஜன், மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன்,சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திருக்குமரன் உட்பட பலர் உள்ளனர்.

## சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் யானைகள் எண்ணிக்கை 780 ஆக உயர்வு: அதிகாரிகள் தகவல்

ஈரோடு, ஆக.13-

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதி உலக யானையில் தினமாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழக வனப் பகுதிகளில் 3,063 யானைகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. யானைகளின் சாணத்தின் மூலம் 50-க்கும் மேற்பட்ட தாவர விதைகள் காடுகளில் பரப்புகின்றன. சாணத்தில் உள்ள பலவகை பூச்சி இனங்கள் பறவைகளுக்கு உணவாகின்றன. இவ்வாறு யானைகள் மூலம் பல்வேறு நன்மைகள் உள்ளன. அதனால்தான் யானைகள் இருந்தாலும் ஆயிரம் பொன் செத்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகள் யானைகள் வாழ்வதற்கான உகந்த இடமாக உள்ளது. முதுமலை, சத்தியமங்கலம், ஆனைமலை மேகமலை. களக்காடு - முண்டந்துறை பகுதிகளில் யானைகள் அதிகம் வாழ்கின்றன. இதுகுறித்து சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் கலை இயக்குனர் ராஜ்குமார் கூறும் போது,

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் தாளவாடி, ஆசனூர், பர்கூர் உள்பட 10 வனச்சரகங்கள் உள்ளன. இந்த வனச்சரகத்தில் யானைகள் அதிக அளவில் வசித்து வருகின்றன. யானைகள் வாழக்கூடிய உகந்த இடமாக இந்த வனப்பகுதி உள்ளது. கடைசியாக எடுத்த கணக்கெடுப்பின் படி சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் யானைகளின் எண்ணிக்கை 720 -ல் இருந்து 780 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய வனப்பகுதிகளில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட யானைகள் இருக்கும் சூழலில் சத்தியமங்கலம் வனப்பகுதியில் மட்டும் 25 சதவீதம் யானைகள் வசித்து வருகிறது. தற்போது யானைகள் இடம்பெயரும் காலம் என்பதால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து வருகிறது. யானைகள் அதிக எண்ணிக்கையில் வனப்பகுதியில் இருந்தால் அந்த வனப்பகுதி வளமாக இருக்கும் என்றார்.

## தனியார் ஆக்கிரமித்துள்ள அரசு பள்ளி நிலத்தை மீட்கக்கோரி பெற்றோர்- ஆசிரியர் கழகத்தினர் கலெக்டரிடம் மனு

ஊட்டி, ஆக.13-

கோக்கால் பகுதியில் தனியார் ஆக்கிரமித்துள்ள அரசு பள்ளி நிலத்தை மீட்கக்கோரி பொதுமக்கள் மற்றும் பெற்றோர்- ஆசிரியர் கழகத்தினர் நீலகிரி கலெக்டரிம் மனு அளித்தனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. பொதுமக்கள், சமூக நல அமைப்பினர் உள்பட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு மனுக்கள் கொடுத்தனர். கீழ் கோத்தகிரி கெங்கரை அருகே உள்ள அம்பாள் காலனி பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கொடுத்த மனுவில் கூறப்பட்டு உள்ளதாவது:-

அம்பாள் காலனியில் 50-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கடந்த 50 வருடங்களாக வசித்து வருகிறோம். படிப்பு, வேலை விஷயமாக தினசரி வெளியூர் சென்றுவர வேண்டி உள்ளது. கிராமத்திற்கு தேவையான நடைபாதை, தடுப்பு சுவர் உள்ளிட்ட வசதிகள் எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எங்கள் கிராமத்திற்கு இதுவரை சாலை வசதி இல்லை.

இதுகுறித்து கடந்த 2 வருடங்களாக அதிகாரிகளிடம்; கூறி வருகிறோம். ஆனால் அரசு அனுமதி கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர். வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் சாலை வசதி இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளது. அவசர தேவைக்கு ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்களும் செல்ல முடியவில்லை.

இதனால் உடல்நிலை பாதிப்படைந்தவர்களை தொட்டில் கட்டி தூக்கி செல்கிறோம். இது போன்ற காரணங்களால்; சில உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. எனவே கூடிய விரைவில் சாலையமைக்க நடவடிக்கை எடுக்க விட்டால் போராட்டம் நடத்த உள்ளோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கோக்கால் ஊர் பொதுமக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் கொடுத்த மனுவில், சோலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கோக்கால் பகுதியில், அரசு உயர்நிலைப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. இந்தப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவை சேர்ந்த 300 குழந்தைகள் படிக்கின்றனர். இந்த பள்ளிக்கு சொந்தமாக 1½ ஏக்கர் இடம் உள்ளது. தனிநபர் ஒருவர் அந்தப் பள்ளி இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்ட அஸ்திவாரம் அமைத்து வருகிறார்.

இது குறித்து தாசில்தார், விஏஓ ஆகியோரிடம் தகவல் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே பள்ளிக்கு சொந்தமான நிலத்தை அளந்து தனி நபரிடமிருந்து இருந்து மீட்டு தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: ஊட்டி, சோலூரில் நாளை நடக்கும் இடங்கள் அறிவிப்பு

ஊட்டி, ஆக.13-

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ஊட்டி, சோலூரில் நாளை நடக்கும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில்,' உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக'உங்களுடன் ஸ்டாலின்' திட்டமுகாமானது கடந்த 15.07.2025 முதல் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமஊராட்சிகள் வாரியாக நடைபெற்று வருகிறது.

அதன்படி,14.08.2025 அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 26, 27 மற்றும் 28-ற்கான முகாம் பெட்போர்டு,பாரதியார் மண்டபத்திலும்,உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 3. 4, 6 மற்றும் 14-ற்கான முகாம் ஸ்ரீனிவாசா பெருமாள் திருமணமண்டபத்திலும், சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 12 வரை உள்ள வார்டுகளுக்கான முகாம் ஊரட்டி சமுதாய கூடத்திலும், கோத்தகிரி வட்டம், கெங்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கெங்கரை சமுதாய கூடத்திலும், குந்தா வட்டம், குந்தா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கூர்மியாபுரம் சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது. நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மேற்படி முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால் தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்துக் கொண்டு கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே,உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## ராஜமங்கலம் பகுதியில் கோயில் உண்டியல் உடைப்பு: ஒருவர் கைது

சென்னை ஆக 13-

சென்னை, கொளத்தூர், ரெட்டியப்பன் நகரில் வசித்து வரும் மாணிக்கம், என்பவர் கடந்த 6 வருடங்களாக கொளத்தூர், பாரத் ராஜீவ்காந்தி நகரில் உள்ள ஶ்ரீதேவி முத்துமாரியம்மன் கோவிலில் பூசாரியாக இருந்து வருகிறார். இவர் கடந்த 04.ந் தேதி அன்று இரவு, மேற்படி கோவிலை பூட்டிவிட்டு, மறுநாள் காலை பார்த்தபோது, கோவிலின் உண்டியலின் பூட்டு உடைக்கப்பட்டு, உண்டியலில் இருந்த பணம் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து மாணிக்கம், ராஜமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். ராஜமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி உண்டியல் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி அசோக்குமார், என்பவரை கைது செய்தனர். மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 17 வயது மற்றும் 15 வயது கொண்ட இரண்டு இளஞ்சிறார்களிடம் விசாரணை செய்யப்பட்டது. அவர்களிடமிருந்து செலவு செய்தது போக பணம் ரூ.400/- மற்றும் குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் மேற்படி 3 பேரும் சேர்ந்து, கடந்த 6 ந் தேதி அன்று கொளத்தூர், எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஶ்ரீமுத்துமாரியம்மன் கோயில் உண்டியலை திருடியதும், GKM காலனியில் உள்ள ஒரு வீட்டில் திருட முயற்சி செய்ததும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி அசோக்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். 2 இளஞ்சிறார்கள், சிறார் நீதிக் குழுமத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

## சுதந்திர தினத்தையொட்டி வரும் 15-ந் தேதி மதுபானக்கடைகளை அடைக்க நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உத்தரவு

ஊட்டி, ஆக.13-

சுதந்திர தினத்தையொட்டி வரும் 15-ந் தேதி மதுபானக்கடைகளுக்கு விடுமுறை விடப்படுவதாக நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் எப்.எல்.1 அரசு மதுபான சில்லறை விற்பனை கடைகள்(டாஸ்மாக்), எப்.எல்.2, கிளப் பார்கள், எப்.எல்.3, ஓட்டல் பார்கள் மற்றும் எப்.எல்.3ஏ ஆகியவற்றில் சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15.08.2025 தேதியில் எவ்வித மதுபானங்களும் விற்பனை செய்யப்பட மாட்டாது எனவும், மேற்படி நாளில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள், தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் எனவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தினத்தில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள், தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. உத்தரவை மீறி எவரேனும் மதுபானங்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட மது விற்பனை உரிமதாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டம்-1937 மற்றும் சம்மந்தப்பட்ட இதர விதிகளின்கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தினங்களில் நீலகிரி மாவட்டத்தில், டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள் மற்றும் ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் ஏதேனும் திறந்திருப்பதாக பொதுமக்களுக்கு தகவல் தெரியும்பட்சத்தில் அந்த விவரத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு மற்றும் அமலாக்கம்(பொ), ஊட்டி (0423-2223802),உதவி ஆணையர் (ஆயம்) உதகமண்டலம், (0423-2443693),மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்), எடப்பள்ளி, குன்னூர் (0423-2234211) ஆகிய தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## முதியவரிடம் வழிப்பறி: 3 பேர் கைது

சென்னை ஆக 13-

சென்னை, திருவல்லிக்கேணி, கற்பக கண்ணியம்மன் கோயில் 2 வது தெருவில் வசித்து வரும் கிரி, என்பவர் வசித்து வருகிறார். இவர் நேற்று முன் தினம் இரவு பெல்ஸ் ரோட்டில் உள்ள டாஸ்மாக் கடை முன்பு நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த 3 நபர்கள் மேற்படி முதியவர் கிரியின் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.2,200/- ஐ பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து கிரி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவல்லிக்கேணி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.அஜித் 2.ஜேம்ஸ் (எ) மணிகண்டன் , 3.எஸ்.அஜித், ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து செலவு செய்தது போக பணம் ரூ.500/- மீட்கப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ஜேம்ஸ் (எ) மணிகண்டன் மீது ஏற்கனவே குற்ற வழக்குகள் உள்ளதும், இவர் மெரினா காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்தது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**பொது அறிவிப்பு**

ஆர்.ரியாஸ் ஆகிய நான் எனது தந்தை F. ரிசாலத் கான் கடந்த 13.07.2023 தேதியில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், பிங்கர் போஸ்ட், காந்தள், மேல் போகி தெரு, க.எண். 70D/15 என்ற விலாசத்தில் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் கேட்டு உதகை கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்து ள்ளேன். எனவே இது சம்மந்தமாக எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின், ஒரு வார காலத்திற்குள் வட்டாட்சியர்/ கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம் என தெரியப்படுத்தப்படுகிறது.

திரு. ஆர்.ரியாஸ்
த/பெ. F. ரிசாலத் கான் (லேட்),
க.எண். 70D/15, மேல் போகி தெரு,
காந்தள், பிங்கர் போஸ்ட்,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

IN THE COURT OF THE HONOURABLE DISTRICT MUNSIF, COONOOR.
O.S.No 26/2016

I.Basavaraj ...Plaintiff
Vs
R.Basavaraj (S.D) & Others ...Defendants

SUMMONS TO DEFENDANTS 14 and 15

To
1.Mr.Pasubathi,
S/o Late Dharmalingam,
2.Mr.Naredra Baba,
S/o Late Dharmalingam,
both residing at Dhoddani Village, Ketty -Palada Post, The Nilgiris.

Dear Sirs
WHEREAS the above-named Plaintiff has instituted a suit against you for Declaration and Partitionand the same stands posted on 11-9-2025 at 10:30 A.M. for your appearance. You are hereby called upon to appear in person or by a pleader on the date and time mentioned above, failing which you will be set exparte.

ADVOCATE FOR THE PLAINTIFF
B.Sugumaran B.Sc., LL.B.,
K.Chandru B.Com., LL.B.,
Advocates,
1&2 Mittal Buildings,
Balaclava,
Coonoor-2, The Nilgiris.

**பொது அறிவிப்பு**

எனது கட்சிக்காரர் கீழேகுறிப்பிட்டுள்ள திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா, புஞ்சைத்தலையூர் கிராமத்தில் 06 ஏக்கர் 02 செண்டு உள்ள புஞ்சை நிலத்தினை கீழேகண்ட உரிமையாளர்களிடமிருந்து 29 ஆண்டுகள்மற்றும் 11 மாத காலத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற உத்தேசம் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | உரிமையாளர்கள் | கிராமம் | சர்வே எண்கள் | அளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1. | 1)தங்கம்மாள் W/o லேட் நல்லசாமி 2)கவிதா க/பெ கிருஷ்ணமூர்த்தி 3) கவின்குமார் த/பெ கிருஷ்ணமூர்த்தி 4) தமிழ்பாரதி த/பெ கிருஷ்ணமூர்த்தி | புஞ்சைத்தலையூர் | 624/1 (பகுதி) | 6.02 |

மேலே குறிப்பிடப்பட்ட நபர்களை தவிர வேறு நபர்கள் மேற்படி புல எண்களில் உரிமை இருப்பதாக கருதினால் தகுந்த ஆதாரங்களுடன் இந்த அறிவிப்பு வெளியான நாளில் இருந்து 07 (ஏழு) தினங்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்ட வழக்கறிஞர்கள் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி காலக்கெடு முடிந்த பின்பு பெறப்படும் ஆதாரங்கள் யாவும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களிடமிருந்து / உரிமையாளர்களிடமிருந்து மேற்படி சொத்தினை எனது கட்சிக்காரர் குத்தகை ஆவணம் பதிவு செய்து கொள்வார் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

Mr.தீபக்சவுத்ரி/Mr.கௌசிக்பிரணவ்,
JSA, Advocates & Solicitors,
பிளாட்எண்.391B,சாலைஎண்.81,
பிலிம்நகர்,ஜூபிலிஹில்ஸ்,
ஹைதராபாத்– 500096, தெலங்கானா,இந்தியா.
Mob: 9885442266 & 8125506521.

**தமிழ்நாடு அரசு – நீர்வளத்துறை**
மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர்–632 006.
மொத்த தொகை ஒப்பந்த முறை–விலை விகித ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / இரு உறை ஒப்பந்த வழி முறை
குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 01 / மே.பா.வ.வ / வேலூர்/ கோ– டெண்டர் / 2025–2026 / நாள். 12.08.2025.

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., 'மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர்–6 அவர்களால் இ–டெண்டர் மூலமாக வ.எண். 1, 2 & 4 வரை "இரு உறை ஒப்பந்த வழி முறை" மற்றும் வ.எண்.3 & 5 "ஒரு உறை ஒப்பந்த வழி முறை" இணையதளத்தில் தகுதியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | வேலையின் தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) ரூபாய் இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், தோனிமேடு கிராமம் அருகே பென்னகர் மடுவின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி. | 552.20 | 2,87,000/- | 12 மாதங்கள் | 26.08.2025 அன்று 15:10 மணிக்கு |
| 2. | இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், அரக்கோணம் பெரிய ஏரியின் வரத்துகால்வாயினை கான்கீரிட்டால் கால்வாய் அமைத்து புனரமைக்கும் பணி. | 388.42 | 2,05,000/- | 06 மாதங்கள் | 26.08.2025 அன்று 15:30 மணிக்கு |
| 3. | திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பரதேசிப்பட்டி ஏரி முதல் காகங்கரை ஏரி வரை ஆர்.சி.சி பைப் பதித்து தண்ணீர் வழங்கும் பணி. | 125.92 | 75,000/- | 06 மாதங்கள் | 26.08.2025 அன்று 15:45 மணிக்கு |
| 4. | திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கொடையாஞ்சி கிராமம் அருகே பாலாற்றில் அமைந்துள்ள தரைக்கீழ் தடுப்புச்சுவர் புனரமைக்கும் பணி. | 485.53 | 2,53,000/- | 12 மாதங்கள் | 26.08.2025 அன்று 16:00 மணிக்கு |
| 5. | வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் பேயாற்றிலிருந்து உனைவாணியம்பாடி ஏரி, உனைவாய் ஏரி, வசந்தநாடை ஏரி மற்றும் சேதுவலை ஏரிகளுக்கு நீர் வழங்கும் நான்கு வரத்துக் கால்வாய்களை மேம்படுத்தும் பணி. | 77.06 | 50,000/- | 03 மாதங்கள் | 26.08.2025 அன்று 16:20 மணிக்கு |

ஒப்பந்தப்புள்ளிகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம். இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை 25.08.2025 அன்று 15.00 மணிவரை பதிவிறக்கம் செய்தல், ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தல் மற்றும் முன் வைப்பு தொகை ஆகியவை இணையத்தளத்தின் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையத்தளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., (கூ/பொ),
மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர் – 6

செ.ம.தொ.இ. / 4382 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**தமிழ்நாடு அரசு - ஊரக வளர்ச்சித்துறை**
**வட்டார வளர்ச்சி அலுவலகம், உதகமண்டலம்.**

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.அ9.எண்.இ.9631055/2025, நாள். .08.2025

உதகமண்டலம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 06.08.2025 முதல் 13.08.2025 வரை வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | ஊராட்சியின் பெயர் | வைப்புத் தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை மற்றும் முன் வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய அலுவலர் | ஒப்பந்தப்புள்ளி படிவம் இணையதளம் பதிவிறக்கம் செய்யப்படும் நாட்கள் | வேலை முடிக்க நிர்ணயிக்கப் பட்ட காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் துணை சுகாதார மையம் கட்டுதல் | | | | | |
| 1 | தொட்டப்பெட்டா மூத்தோரை கிராமத்தில் துணை சுகாதார மையம் அமைத்தல் | 49.67/– | வட்டார வளர்ச்சி அலுவலர், உதகமண்டலம் | 11.08.2025 முதல் 19.08.2025 | 6 மாதங்கள் |

ஒப்பந்ததாரர் தகுதி : உதகமண்டலம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ரூ.9.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் கடன்தீர்வு மதிப்பு பதிவு செய்த ஒப்பந்ததாரர்கள் ரூ.30.00 இலட்சம் வரையிலான இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கலாம்.

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அலுவலக தொலைபேசி எண்.0423–2443996

இடம் : உதகமண்டலம். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
நாள் : 08.2025. உதகமண்டலம்.

வெ.ஆ.எண்.83/செ.ம.தொ.அ/ஒ.பு.2025/நீலகிரி மாவட்டம்.

## ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்:

# பும்ரா விளையாடுகிறார்



**மும்பை, ஆக். 13-**

ஆசிய கோப்பை தொடருக்கான இந்திய அணி இன்னும் ஒரு வாரத்தில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கும் நிலையில் இந்திய அணியில ஜஸ்பிரித் பும்ரா விளையாடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**செப். 9-ம் தேதி...**

8 அணிகள் இடையிலான 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ந் தேதி முதல் 28-ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**'ஏ' பிரிவில் இந்தியா...**

அதன்படி 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும்.

**பாகிஸ்தானை....**

இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10-ந் தேதி துபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14-ம் தேதி துபாயிலும், ஓமனை செப்.19-ந் தேதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி செப்.28-ந் தேதி துபாயில் அரங்கேறுகிறது.

**விளையாடுகிறார்...**

இந்த தொடரில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா விளையாட மாட்டார் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் தற்போது வெளியான தகவலின் படி, ஆசிய கோப்பையில் ஜஸ்பிரித் பும்ரா விளையாட உள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் ஆசிய கோப்பை நிறைவடைந்தவுடன் நடைபெற உள்ள வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் (2 போட்டிகள்) முதல் போட்டியை அவர் தவற விட உள்ளதாக கூறப்படுகிறது. ஆசிய கோப்பை தொடருக்கான இந்திய அணி இன்னும் ஒரு வாரத்தில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## துணை முதல்வர் உதயநிதியுடன் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் சந்திப்பு



**சென்னை, ஆக. 13-**

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை, இந்திய முன்னாள் கேப்டன் கபில்தேவ் சந்தித்து பேசினார்.

**கிரிக்கெட் ஜாம்பவான்...**

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை, இந்திய முன்னாள் கேப்டன் கபில்தேவ் சந்தித்துள்ளார். இது தொடர்பாக உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது, கிரிக்கெட் ஜாம்பவான் கபில் தேவ் உடனான சந்திப்பு அருமையாக இருந்தது. அவரது பயணம் நம் நாடு முழுவதும் உள்ள எண்ணற்ற விளையாட்டு வீரர்களுக்கு ஒரு உத்வேகமாக அமைந்தது.

**கபில்தேவ் பாராட்டு...**

விளையாட்டுத் துறையில் தமிழக அரசு எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளை கபில்தேவ் பாராட்டினார். கிரிக்கெட்டைத் தாண்டி, குறிப்பாக கோல்ப் விளையாட்டை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தால இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகப் பணி தொகுதியில் உதவி ஆணையர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலாளர் முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆசிய கோப்பை கிரிக்கெட்:

# இந்திய அணி விரைவில் அறிவிப்பு

**மும்பை, ஆக. 13-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு எப்போது? என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன் படி இந்திய அணி வரும் 19 அல்லது 20-ம் தேதிகளில் அறிவிக்கப்பட உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

**தலா ஒரு முறை....**

8 அணிகள் இடையிலான 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும்.

**ரசிகர்கள் எதிர்பார்ப்பு....**

இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10-ந் தேதி துபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14-ந் தேதி துபாயிலும், ஓமனை செப்.19-ந் தேதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப் போட்டி செப்.28-ந் தேதி துபாயில் அரங்கேறுகிறது. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணியில் யாரெல்லாம் இடம்பெற போகிறார்கள்? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

**இந்திய அணி அறிவிப்பு...**

டி20 அணியின் கேப்டனான சூர்யகுமார் யாதவ் இன்னும் முழுமையாக உடற்தகுதியை எட்டவில்லை என கூறப்படுகிறது. இன்னும் ஒரு வார காலம் என்சிஏ-வில் இருந்து உடற்தகுதியை நிரூபிக்க பி.சி.சி.ஐ. மருத்துவக்குழு அறிவுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு எப்போது? என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி இந்திய அணி வரும் 19 அல்லது 20-ம் தேதிகளில் அறிவிக்கப்பட உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

## 13-வது மகளிர் உலகக்கோப்பை:

# இந்திய அணி ஆதிக்கம் செலுத்தும்: மிதாலி ராஜ்

**மும்பை, ஆக. 13-**

இந்தியாவில் நடைபெறவுள்ள 13-வது மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்தும் என்று இந்திய மகளிரணி கேப்டன் மிதாலி ராஜ் தெரிவித்துள்ளார்.

**4-வது முறையாகும்....**

13-வது மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 30-ந் தேதி முதல் நவம்பர் 2-ந் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடக்கிறது. இந்தியாவில் மகளிர் உலகக் கோப்பை அரங்கேறுவது இது 4-வது முறையாகும். இதில் இந்தியா, நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, வங்காளதேசம் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் டாப்-4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

**கேப்டன் மிதாலி ராஜ்...**

உலகக் கோப்பை போட்டி தொடங்குவதற்கு இன்னும் 50 நாட்கள் மட்டுமே இருப்பதை குறிக்கும் கவுண்ட்டவுன் நிகழ்ச்சி மும்பையில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் பேசிய இந்திய மகளிர் அணியின் முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ் கூறியதாவது, கடந்த ஓராண்டுக்கும் மேலாக இந்திய அணி டி20 போட்டிகளில் மட்டுமில்லாமல், ஒருநாள் போட்டிகளிலும் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கிலாந்தில் நடைபெற்ற தொடரில் இந்திய அணி மிகவும் சிறப்பாக செயல்பட்டது.

**சிறப்பான வாய்ப்பு...**

அவர்களது சொந்த மண்ணிலேயே இங்கிலாந்தை வீழ்த்தியது. இந்திய அணி மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. இந்தியாவில் உலகக் கோப்பை நடைபெறுவதால், இந்திய அணிக்கு இதைவிட சிறப்பான வாய்ப்பு கிடைக்காது என நினைக்கிறேன். இந்த உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்தும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆசிய கோப்பை தொடர்:

# இந்திய அணியில் கே.எல்.ராகுல், ஜெய்ஸ்வாலுக்கு வாய்ப்பு இல்லை?

**மும்பை, ஆக். 13-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் கே.எல்.ராகுல், ஜெய்ஸ்வாலுக்கு வாய்ப்பு இல்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

**சூப்பர் 4 சுற்றுக்கு...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும்.

**வாய்ப்பு இல்லை...**

அஜித் அகர்கர் தலைமையிலான தேர்வுக்குழு தேர்வு செய்யும் வீரர்கள் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெய்ஸ்வால், கே.எல்.ராகுல் ஆகியோர் 20 ஓவர் அணியில் இடம்பெற வாய்ப்பு இல்லை. இதேபோல சாய் சுதர்சனுக்கும் வாய்ப்பு குறைவு. அதே சமயம் டெஸ்ட் கேப்டனான சுப்மன் கில்லுக்கு டி20 அணியில் வாய்ப்பு கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது.

### உத்தேச இந்திய அணி:

சூர்யகுமார் யாதவ் (கேப் டன்), சுப்மன் கில், அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன், திலக் வர்மா, ஷிவம் துபே, ஹர்திக் பாண்ட்யா, அக்ஷர் படேல், வாஷிங்டன் சுந்தர், வருண் சக்கரவர்த்தி, குல்தீப் யாதவ், அர்ஷ்தீப் சிங், ஜஸ்பிரீத் பும்ரா, ஹர்சித் ராணா அல்லது பிரசித் கிருஷ்ணா, ஜிதேஷ் சர்மா அல்லது துருவ் ஜுரெல்.

## ஹர்மன்ப்ரீத் கவுர் நம்பிக்கை

13வது மகளிர் உலகக் கோப்பை போட்டி தொடங்குவதற்கு இன்னும் 50 நாட்கள் மட்டுமே இருப்பதை குறிக்கும் கவுண்ட்டவுன் நிகழ்ச்சி மும்பையில் நடந்தது. இதில் ஐ.சி.சி. தலைவர் ஜெய்ஷா, தலைமை செயல் அதிகாரி சஞ் ஜோக் குப்தா, இந்திய முன்னாள் வீரர் யுவராஜ்சிங், முன்னாள் வீராங்கனை மிதாலிராஜ், இந்திய மகளிர் அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர், துணை கேப்டன் மந்தனா, ஜெமிமா ரோட்ரிக்ஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் கூறியதாவது, உள்ளூர் ரசிகர்களின் முன் விளையாடுவது எப்போதும் சிறப்பு வாய்ந்தது. இந்த முறை எங்களது 100 சதவீத பங்களிப்பை வழங்கி தடைகளை தகர்த்தெறிந்து கோப்பையை கையில் ஏந்துவோம் என்று உறுதியாக நம்புகிறேன். அந்த தருணத்துக்காகத்தான் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். உலகக் கோப்பை போட்டிகள் எப்போதும் சிறப்பு வாய்ந்தவை. அதில் தேசத்துக்காக விசேஷமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## ரொனால்டோவுக்கு திருமணம்

கால்பந்து விளையாட்டில் இந்த தலைமுறையின் சிறந்த வீரராக கிறிஸ்டியோனோ ரொனால்டோ கருதப்படுகிறார். ரொனால்டோ கால்பந்து மூலம் கோடிக்கணக்கில் சம்பாதித்து வரும் நிலையில், விளம்பரம் மூலமும் கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகிறார். இவர் 2015-ம் ஆண்டு வரை இரினா ஷாய்க் என்ற பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார். இரினாவுடனான ஐந்து வருட தொடர்பை முறித்துக் கொண்ட பின் அதன்பின், 2016-ல் இருந்து ஜார்ஜினா ரோட்ரிக்ஸ் என்பவருடன் பழக தொடங்கினார்.

தற்போது வரை ஜார்ஜினா ரோட்ரிக்ஸ் உடன் தான் ரொனால்டோ வாழ்ந்து வருகிறார். திருமணம் செய்யாமல் வாழ்ந்து வரும் ரொனால்டோ - ஜார்ஜினா ரோட்ரிக்ஸ் தம்பதிக்கு 5 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், தனது நீண்டநாள் காதலி ஜார்ஜினாவை கிறிஸ்டியானோ ரொனால்டோ திருமணம் செய்துகொள்ளவுள்ளார். விலையுயர்ந்த வைர மோதிரத்துடன் ஜார்ஜினாவுக்கு, ரொனால்டோ பிரப்போஸ் செய்துள்ளார். இந்த மோதிரம் 10 முதல் 15 காரட் வரை இருக்கலாம் என்றும் அதன் விலை 8 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெவால்டு பிரெவிஸ் முதல் சதம்



தென் னாப் பி ரிக்க வீரர் டெவால்டு பிரெவிஸ் தனது முதல் சர்வதேச டி20 சதத்தை நிறைவு செய்துள்ளார். ஆஸி.க்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 41 பந்தில் அதிரடியாக இந்தச் சதத்தை நிறைவு செய்தார். இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸி. பந்துவீச்சைத் தேர்வு செய்தது. தொடக்க வீரர்கள் சொதப்பிய நிலையில் பிரெவிஸ், ஸ்டப்ஸ் சிறப்பாக பார்ட்னர்ஷிப் அமைத்து விளையாடினார்கள். ஸ்டப்ஸ் 31 ரன்களுக்கு ஆட்டமிழக்க, பிரெவிஸ் 103 ரன்களுடன் விளையாடி வருகிறார்.

தெ.ஆ. அணியில் அதிவேகமாக சதம் அடித்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார். பேபி ஏபிடி என்பதனை நிரூபித்து வருகிறார். 16.2 ஓவர்களில் தெ.ஆ. அணி 183/4 ரன்கள் எடுத்துள்ளது. தனியாளாக அணியை பிரெவிஸ் தூக்கி நிறுத்தினார். கடந்த சீசனில் சிஎஸ்கே அணியில் நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலித்த பிரெவிஸுக்கு தென்னாப்பிரிக்க அணியில் தொடர்ச்சியாக வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## தீப்தி சர்மா முன்னேற்றம்

பாகிஸ்தான் - அயர்லாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நிறைவடைந்துள்ளது. இதனையடுத்து மகளிர் டி20 கிரிக்கெட்டில் வீராங்கனைகளுக்கான புதிய தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில் பேட்டிங் தரவரிசையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை. ஆஸ்திரேலியாவின் பெத்மூனி முதலிடத்திலும், வெஸ்ட் இண்டீசின் ஹெய்லி மேத்யூஸ் 2-வது இடத்திலும், இந்தியாவின் மந்தனா 3-வது இடத்திலும் உள்ளனர். பாகிஸ்தானுக்கு எதிரான டி20 தொடரில் சிறப்பாக செயல்பட்ட அயர்லாந்து வீராங்கனை ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் 8 இடங்கள் முன்னேறி 19-வது இடத்தை பிடித்துள்ளார். இது அவரது சிறந்த தரநிலையாகும்.

பந்துவீச்சாளர்கள் தரவரிசையை பொறுத்தவரை அயர்லாந்து தொடரில் சொதப்பிய பாகிஸ்தான் வீராங்கனை சாடியா இக்பால் முதலிடத்தை இழந்துள்ளார். அதன் காரணமாக 2-வது இடத்தில் இருந்த ஆஸ்திரேலிய வீராங்கனை அன்னாபெல் சதர்லேண்ட் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். அதேபோல் இந்தியாவின் தீப்தி சர்மா ஒரு இடம் முன்னேறி சாடியா இக்பாலுடன் இணைந்து 2-வது இடத்தை பிடித்துள்ளார். ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் ஹெய்லி மேத்யூஸ் நம்பர்1 இடத்தில் தொடருகிறார். இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாக அயர்லாந்து வீராங்கனை ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் 3 இடங்கள் முன்னேறி 6-வது இடத்தை பிடித்துள்ளார். இந்தியாவின் தீப்தி சர்மா 3-வது இடத்தில் தொடருகிறார்.

## இந்தியாவுக்கே முன்மாதிரியான முயற்சி:

# தாயுமானவர் திட்டம் குறித்து முதல்வர் ஸ்டாலின் நெகிழ்ச்சி

**சென்னை, ஆக. 13-**

70 வயதுக்கு மேற்பட்ட 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள் – 1 லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 21 லட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் பயனடையும் 'தாயுமானவர் திட்டம்' உள்ளிட்ட அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச் சென்று கொடுப்பது, இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சி என்று முதல்வர் ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

'தாயுமானவர் திட்டம்' தொடங்கிவைக்கப்படுவது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவு மூலம் கருத்து தெரிவித்துள்ளார். அதன் விவரம் வருமாறு: நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். அந்த வரிசையில், என்னுடைய மனதிற்கு பிடித்த திட்டமாக உருவாகியிருப்பதுதான், இந்த தாயுமானவர் திட்டம்.

கூட்டுறவுத் துறை சார்பில், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இப்படி, அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச் சென்று கொடுப்பது, இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சி.

ஒரு திட்டத்தை அறிவிப்பதோடு, கடமை முடிந்துவிடுவதாக நாம் நினைப்பதில்லை. அந்த திட்டத்தின் பலன் - பயன், கடைக்கோடி மனிதரையும் சென்று சேருகிறதா என்று கண்காணிப்பதையும் கடமையாக நினைக்கிறேன். அப்படி, வயது முதிர்ந்தோரும் - மாற்றுத் திறனாளிகளும் ரேசன் கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்குவதில் ஏற்படும் சிரமத்தை உணர்ந்து, இந்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.

இந்தத் திட்டத்தை 34 ஆயிரத்து 809 நியாய விலைக் கடைகளில் செயல்படுத்த போகிறோம். 70 வயதுக்கு மேற்பட்ட 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள் - ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என்று 21 லட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் இந்த திட்டத்தால் பயனடைய போகிறார்கள். ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் குடிமை பொருட்கள் உங்கள் வீடு தேடி வந்துவிடும். இதற்காக கூட்டுறவுத் துறைக்கு ஆகப்போகும் 30 கோடியே 16 லட்சம் ரூபாயை கூடுதல் செலவாக கருதாமல் - மக்களுக்கு செய்யும் உயிர்காக்கும் கடமையாக நாங்கள் நினைக்கிறோம். இது கூட்டுறவுத் துறையின் மிகப்பெரிய சேவை. அந்தத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், கடை விற்பனையாளர்கள் செய்யப் போகும் மிகப்பெரிய கடமை.

தமிழ்நாடு முழுவதும் 37 ஆயிரத்து 328 நியாய விலைக் கடைகள் இருக்கிறது. இதில், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2 ஆயிரத்து 394 புதிய நியாய விலைக் கடைகளை திறந்திருக்கிறோம். தலைவர் கலைஞர் வழியில், இந்த நியாய விலைக் கடைகளை நாம் முறையாக - சிறப்பாக நடத்துவதால்தான், தமிழ்நாடு இன்றைக்கு பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக இருக்கிறது. இந்த ரேசன் கடைகளின் பயன்பாட்டை இன்னும் எளிமையாக்க முயற்சிகள் எடுத்திருக்கிறோம்.

இந்த நேரத்தில், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலவலர்களுக்கு நான் வைக்கும் வேண்டுகோள் என்பது - இந்த திட்டத்தின் நோக்கம் நூறு விழுக்காடு நிறைவேறும் வகையில் உங்களின் பணி அமைய வேண்டும். உங்களை எதிர்பார்த்து காத்திருக்கும் முதியவர்களும் மாற்றுத் திறனாளிகளும் மனம் குளிரும் வகையில் நீங்கள் கனிவாக நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் பெறும் நல்ல பெயர்தான், ஆட்சிக்கு கிடைக்கும் பாராட்டு. இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்

## கிருஷ்ணகிரியில் இ.பி.எஸ். வாக்குறுதி

**சென்னை, ஆக. 13-**

'விவசாயிகளின் கஷ்ட, நஷ்டங்கள் தெரியும்... அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேறும்..' எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி அளித்துள்ளார்.

'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' எழுச்சிப் பயணம் மேற்கொண்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எடப்பாடி பழனிசாமி கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள தனியார் விடுதியில் வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை விவசாயிகளோடு கலந்துரையாடினார். பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். இதையடுத்து அவர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி,

'அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது அவ்வப்போது விவசாயிகளை சந்தித்து பல்வேறு திட்டங்களை கொண்டுவந்தோம். தேவையான இடங்களில் தடுப்பணைகளை கட்டினோம். குடிமராமத்து திட்டம் மூலம் 6 ஆயிரம் ஏரிகளையும், ஆயிரக்கணக்கான குளங்களையும் தூர் வாரினோம். அதிலிருந்து கிடைத்த வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்கினோம்.

விவசாயிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் மும்முனை மின்சாரம் வழங்கினோம். ஆட்சி மாற்றத்துக்கு பிறகு மும்முனை மின்சாரம் தொடர்ச்சியாகக் கிடைக்கவில்லை என்று வருத்தப்பட்டார்கள். அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்தும் விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.

விளைநிலங்களில் யானைகள் புகுந்து பயிர்களை சேதப் படுத்து வதாகவும், அதற்கு உரிய இழப்பீடு வேண்டும் என்றும் கேட்டிருக்கிறீர்கள். அ.தி.மு.க. அரசு இருக்கின்ற வரை, வன விலங்குகளால் பயிருக்கு இழப்பு, சேதம் ஏற்பட்டால் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் இந்த மலர் ஏல மையத்தை திறந்து பயன்பாட்டுக்கு கொண்டுவருவோம். எனக்கு விவசாயம்தான் பிரதான தொழில். விவசாயம் செய்வதில் இருக்கும் கஷ்ட நஷ்டங்கள் எனக்குத் தெரியும். அவர்களுக்கு தேவையான அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பதுதான் எங்கள் முக்கிய பணியாக இருக்கும்.,,'' என்று உறுதி கொடுத்தார்.

## மதுரையில் வரும் 21-ம் தேதி நடைபெறும்

# த.வெ.க. மாநில மாநாட்டு ஏற்பாடு பணிகள் தீவிரம்

**மதுரை, ஆக. 13-**

மதுரையில் தமிழக வெற்றிக்கழக மாநில மாநாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழக வெற்றிக்கழகத்தின் 2-வது மாநில மாநாடு மதுரையில் வருகிற 21-ம் தேதி நடைபெறும் என்று அக்கட்சியின் தலைவர் நடிகர் விஜய் அறிவித்திருந்தார். இதையடுத்து மதுரை அருகே பாரபத்தியில் 500 ஏக்கர் பரப்பளவில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மேடை அமைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மேடையிலிருந்து தொண்டர்களிடையே நடந்து செல்லும் விதமாக 1,000 அடி நீளத்தில் தனி மேடை அமைக்கப்படுகிறது. கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த், மாநாட்டு ஏற்பாடுகளை கவனித்து வருகிறார்.

மாநாட்டுக்கு வரும் தொண்டர்களுக்கு செய்யப்பட்ட வசதிகள் குறித்து மதுரை மாவட்ட காவல்துறை 42 கேள்விகளை எழுப்பி விளக்கம் கோரியது. இதற்கான விளக்கங்களை கட்சி நிர்வாகிகள் அளித்துள்ளனர். அதில் கூறியிருப்பதாவது: மாநாட்டில் 1.20 லட்சம் ஆண்கள், 25 ஆயிரம் பெண்கள், 4,500 முதியவர்கள், 500 மாற்றுத் திறனாளிகள் பங்கேற்கின்றனர்.

குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு அனுமதியில்லை. மாநாட்டுத் திடலில் 1 லட்சம் நாற்காலிகள் போடப்படும். மாநாட்டில் பங்கேற்போருக்கு சிறப்பு அனுமதி சீட்டு என எதுவுமில்லை. மாநாட்டுக்கு எளிதாக வந்து செல்ல 18 வழித்தடங்கள் அமைக்கப்படுகின்றன. மதுரை கிழக்கு மாவட்டச் செயலாளர் கல்லாணை கூறுகையில், 'கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் ஆலோசனையின் பேரில் மாநாட்டு ஏற்பாடுகள் 80 சதவீதம் முடிவடைந்துள்ளன. மாநாடு குறித்த ஆட்டோ பிரச்சாரம் உள்ளிட்ட பணிகளை தீவிரப்படுத்தியுள்ளோம். ஓரிரு நாளில் காவல் துறையின் முறையான அனுமதி கிடைத்துவிடும் என்று கூறினார்.

# சினிமா CINI செய்திகள்

## 'சொட்ட சொட்ட நனையுது' இசை வெளியீட்டு விழா




அட்லர் எண்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'சொட்ட சொட்ட நனையுது'. வரும் ஆகஸ்ட் 22 ஆம் தேதி வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா, சமீபத்தில் நடைபெற்றது. இளம் வயதில் தலையில் வழுக்கை விழும் நாயகனுக்கு வீட்டில் திருமணம் செய்யத் திட்டமிடுகிறார்கள். இதைத்தொடர்ந்து அடுத்தடுத்து நடக்கும் சம்பவங்களே இப்படத்தின் மொத்த கதை. நவீன் எஸ்.ஃபரீத் இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். கலக்கப்போவது யாரு புகழ் ராஜா படத்துக்கு வசனம் எழுதியுள்ளார். நாயகனாக நிஷாந்த் ரூஷோ நடிக்க அவருக்கு ஜோடியாக பிக்பாஸ் வர்ஷிணி, மற்றும் ஷாலினி நடிக்கிறார்கள்.

விழாவில், ராஜா பேசுகையில், படத்தை 18 நாட்களில் எடுத்து முடித்துள்ளோம். இந்தப்படத்தில் நான் நடித்திருக்கிறேன், வசனம் எழுதியுள்ளேன், உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளேன். இந்தப்படம் குடும்பத்தோடு ரசிக்கும் படியான படமாக இருக்கும் என்றார். Adler Entertainment சார்பில் அசார் பேசுகையில், எங்கள் 10 வருட கனவு இப்போது தான் நனவாகியுள்ளது. இது மிகப்பெரிய பயணம். நிஷாந்தை எனக்கு 6 வருடங்களாகத் தெரியும். எங்களிடம் இருந்த மொத்த பணத்தையும் உழைப்பையும் போட்டு இப்படத்தை எடுத்துள்ளோம் என்றார்.

இயக்குநர் நவீத் S ஃபரீத் பேசுகையில், 10 நாள் ஷீட்டிங் நடத்த தான் எங்களிடம் பணம் இருந்தது, ஆனால் 18 நாளில் இந்தப்படத்தை முடித்து விட்டோம். அப்பாவை நடிக்க வைத்து அவரிடம் பணம் வாங்கி படத்தை எடுத்தோம் என்றார்.

## 'ரெட் பிளவர்' திரை விமர்சனம்



கதை 2047 ல் நடக்கிறது. மூன்றாவது உலகப் போர் முடிவடைந்து, உலக நாடுகள் பலவற்றை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ராணுவ கூட்டமைப்பு ஒன்று இந்தியாவையும் குறிவைக்கிறது. அதன் செயல்பாடுகளை முறியடிப்பதற்காக உளவுத்துறை அதிகாரி நாயகன் விக்னேஷ் மூலம் இந்திய அரசு ஆபரேஷன் 'ரெட் பிளவர்'-ரை கையில் எடுக்கிறது. ரெட் பிளவரின் செயல்பாடுகள் என்னென்ன என்பதை முழுக்க கிராபிக்ஸ் பின்னணியில் சொல்வதே 'ரெட் பிளவர்' படம்.

நாயகன் மற்றும் வில்லன் என்று இரண்டு வேடங்களில் நடித்திருக்கும் விக்னேஷ், மாறுபட்ட வேடங்களில் ஸ்டைலிஷ் ஆக்ஷன் ஹீரோவாக வலம் வருகிறார். நாயகி மணிஷா ஜெஷ்னானி, கவர்ச்சியில் கிரங்கடிக்கிறார். ஒய்.ஜி.மகேந்திரன், நாசர், தலைவாசல் விஜய் ஆகியோரது அனுப நடிப்பு படத்திற்கு பெரிய பலம் சேர்த்திருக்கிறது. தேவ சூர்யாவின் ஒளிப்பதிவும் சந்தோஷ் ராமின் இசையும் ஓகே ரகம். எழுதி இயக்கியிருக்கும் ஆண்ட்ரூ பாண்டியன், கதைக்கருவில் தொலைநோக்கு பார்வை வைத்தது போல அதை காட்சி மொழியிலும் கொடுத்து இருந்தால் இந்த சிவந்த பூ மனம் வீசியிருக்கும்.

## வெற்றி நடிக்கும் 'பிளாக் கோல்டு'



M.M ஸ்டுடியோஸ் சார்பில் M.மூர்த்தி வழங்கும், தீரன் அருண்குமார் இயக்கத்தில், வெற்றி, பிரியாலயா, லிவிங்ஸ்டன், துளசி, பிக்பாஸ் அபிராமி, A.வெங்கடேஷ், அருள் D சங்கர், ராமர் உள்ளிட்டோர் நடிக்கும் படம் பிளாக் கோல்டு. இந்த படத்தின் First லுக் சமீபத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. ஒரு படித்த நடுத்தர குடும்பத்தை சேர்ந்த இளைஞன் தன் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு இழப்பினை ஈடு செய்ய எந்த அளவிற்கு துணிகிறான் என்பதே இப்படத்தின் கதைக்கரு.

ஒரு சாதாரண நடுத்தர இளைஞனுக்கும் மிகப்பெரிய வணிக மாபியாக்களுக்கும் இடையே நடக்கும் சம்பவத்தை கொண்டு இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. படத்துக்கு ஒளிப்பதிவு சந்தோஷ்குமார் வீராசாமி, இசை - கவாஸ்கர் அவினாஷ், பாடல்கள் – மோகன்ராஜன், எடிட்டிங் – ராவணன், மக்கள் தொடர்பு - சதீஷ் எய்ம்

## லிங்கேஷ் அனுமோள் இணையும் 'காயல்'




ஜெ ஸ்டுடியோ ஜேசு சுந்தரமாறன் தயாரிப்பில் லிங்கேஷ், அனுமோள், காயத்ரி, ஸ்வாகதா, ரமேஷ்திலக் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் படம் காயல்.

எழுத்தாளர் தமயந்தி இயக்கியிருக்கும் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் பேசிய தயாரிப்பாளர் ஜேசு சுந்தரமாறன், நான் அமெரிக்காவில் வசித்து வருவதால் இயக்குனர் தமயந்தி ஸ்கிரிப்ட் எனக்கு அனுப்பி வைத்திருந்தார்கள் அதை வாசித்து முடித்ததும் இந்த படத்தை நாம் தயாரிக்க வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டது.

நடிகர்கள் ,தொழில்நுட்ப கலைஞர்கள் யாரையும் நேரில் பார்த்ததில்லை இன்றுதான் பார்க்கிறேன். ஒரு நல்ல கதை அதற்கான இடத்தில் தானாக வந்தடையும், இந்தக்கதையும் அப்படிப்பட ஒரு இடத்தை வந்தடைந்திருக்கிறது என்றார். விழாவில் பேசிய லிங்கேஷ், இயக்குனர் தமயந்தி அவரது சொந்த வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை சினிமாவாக்க முயற்சித்திருப்பது வரவேற்கிறேன். ஒரு பொறுப்பான படத்தில் நடித்த திருப்தி எனக்கு ஏற்பட்டு இருக்கிறது என்றார்.



**மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினருமான வி.வி.ராஜன்செல்லப்பாவின் பிறந்தநாளை முன்னிட்டு அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் பா.சரவணன் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார். அருகில் பெரியபுள்ளான் எம்.எல்.ஏ,வக்கீல் ரமேஷ், முனிச்சாலை சரவணன், டால்பின் அசோக், பைக்காரா செழியன், ராமசுப்பு, சுந்தர் ஆகியோர் உள்ளனர்.**

## ஆகஸ்ட் 22-ம் தேதி வெளியாகும் 'இந்திரா'




JSM Movie Production, Emperor Entertainment நிறுவனங்கள் சார்பில், தயாரிப்பாளர்கள் ஜாஃபர் சாதிக், இர்ஃபான் மாலிக் தயாரிப்பில், இயக்குநர் சபரீஷ் நந்தா இயக்கத்தில், வசந்த் ரவி, மெஹ்ரீன், சுனில் நடிப்பில் உருவாகியுள்ள படம் இந்திரா. ஆகஸ்ட் 22 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில் இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் நடிகர் வசந்த் ரவி பேசியதாவது...

இந்திரா படம் ஒவ்வொரு நொடியும் உங்களை மகிழ்விக்கும். என் படம் என்பதால் சொல்லவில்லை, உண்மையிலேயே மிக வித்தியாசமான படம். சபரீஷ் கதை சொன்ன நொடியிலிருந்து படம் முடித்து வரும் வரை, படத்தில் உழைத்த அனைவரும் ஒரே உணர்விலிருந்தோம். படம் மிக அழகாக வந்துள்ளது என்றார். இப்படத்தினை Trident Arts சார்பில் தயாரிப்பாளர் ரவீந்திரன் தமிழகமெங்கும் வெளியிடுகிறார். வரும் ஆகஸ்ட் 22 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. வசந்த் ரவி மற்றும் சுனில், மெஹ்ரீன் பீர்சாடா, அனிகா சுரேந்திரன், கல்யாண், ராஜ் குமார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

## பிரவீன் காண்ட்ரேகுலா இயக்கும் 'பர்தா' படம்



சினிமா பண்டி', 'சுபம்' ஆகிய படங்களை இயக்கிய பிரவீன் காண்ட்ரேகுலா தற்போது பர்தா என்ற படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் அனுபமா பரமேஸ்வரன் சுப்பு என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படம் பற்றி பேசிய இயக்குனர் பிரவீன் காண்ட்ரேகுலா, ஒரு சிறிய கிராமத்தில் இருக்கும் இளம் பெண்ணான சுப்பு தனது முகத்தை பர்தாவில் மறைத்து வைக்க வேண்டும் என்ற பாரம்பரியத்திற்கு கட்டுப்பட்டு நடக்கிறாள்.

ஆனால், நகரத்தைச் சேர்ந்த தர்ஷனா மற்றும் சங்கீதா கிரிஷ் இருவரையும் சந்திக்கும்போது சுப்புவின் தலை எழுத்து முற்றிலும் மாறுகிறது. அப்படி என்ன நடக்கிறது என்பதுதான் ஒரு வரிக்கதை என்றார். ஆனந்த மீடியா விஜய் டோங்கடா, ஸ்ரீனிவாசுலு பி.வி மற்றும் ஸ்ரீதர் மக்குவா ஆகியோரால் தயாரிக்கப்படும் இந்த பர்தா படத்தில் ராக் மயூர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஆகஸ்ட் 22 அன்று தெலுங்கு மற்றும் மலையாளத்தில் இப்படம் ஒரே நேரத்தில் வெளியாகிறது.

## அருப்புக்கோட்டையில் தாயுமானவர் திட்டத்தை துவக்கி வைத்தார் அமைச்சர்



**அருப்புக்கோட்டை, ஆக. 13-**

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 961 நியாய விலை கடைகளில் 70 வயதிற்கும் மேற்பட்டவர்கள் 49 ஆயிரத்து 716 பேருக்கு இரண்டாவது சனி மற்றும் ஞாயிறு தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடு தேடிச் சென்று ரேஷன் பொருட்களை கடைபொறுப்பாளர்கள் வழங்குவார்கள். அருப்புக்கோட்டையில் தாயுமானவர் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா முன்னிலையில் அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தொடங்கி வைத்து பேசினார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 1, 21 மற்றும் 28 வது பாட்டு பகுதியில் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடி சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டமான தாயுமானவர் திட்டத்தை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இந்த திட்டத்தில் பயன்படும் பயனாளிகளின் வீடுகளுக்கே தேடிச் சென்று அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் ரேஷன் பொருட்கள் வழங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு பின் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியது.

முதலமைச்சர் தமிழகத்தில் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எல்லாம் அவர்கள் வீடு தேடி ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம் தாயுமானவர் என்ற பெயரில் திட்டத்தை முதலமைச்சர் துவக்கி வைத்துள்ளார். அந்த அடிப்படையில் நானும் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரும் கூட்டுறவுத் துறை சார்ந்த அதிகாரிகளும் இன்றைய தினம் அருப்புக்கோட்டையில் இந்த திட்டத்தை நாங்கள் துவக்கி வைத்துள்ளோம். நம்முடைய மாவட்டத்தில் மொத்தம் 961 நியாய விலை கடைகள் இருக்கிறது. அதில் 70 வயதிற்கும் மேற்பட்டவர்கள் 49 ஆயிரத்து 716 பேர் மொத்தம் இருக்கின்றனர். இவர்கள் வீடு தேடி ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு தினங்களில் கூட்டுறவுத் துறை சார்பில் அதிகாரிகள் மற்றும் அந்த ரேஷன் கடையின் பொறுப்பாளர்கள் வீடு தேடி சென்று முதியோர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்குவார்கள்.

அதனால்தான் வேலை நாட்களில் இந்த பணியை செய்யாமல் விடுமுறை நாட்களில் இந்த பணியை செய்ய முடிவு செய்துள்ளோம். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் அதிகமாக மகளிர் உரிமை தொகை விண்ணப்பங்கள் வருகிறது. மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பம் மட்டும் சென்னைக்கு அனுப்பி விட்டு தகுதி சரி பார்த்த பிறகு, தகுதியான நபர்களுக்கு மகளிர் உரிமை தொகை வழங்கப்படும் என கூறினார். நிகழ்ச்சியில் முன்னாள ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், மண்டல கூட்டுறவு சங்க இணை பதிவாளர் செந்தில்குமார், அருப்புக்கோட்டை முன்னாள் நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம், தாசில்தார் செந்தில் வேல், நகர கழகச் செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றிய கழகச் செயலாளர் பாலகணேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாபுஜி, கவுன்சிலர்கள் மீனாட்சி, கவிதா, இளங்கோ ,ஜோதி ராமலிங்கம், மற்றும் அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மேற்கு 5-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் சோலைராஜா தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசினார். இதில் மகளிரணி செயலாளர் பா.வளர்மதி,பொறுப்பாளர் ஆனிமுத்து, வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், கிருஷ்ணமூர்த்தி, சாலை ரத்தினம், காளவாசல் பாண்டி, சிவபாண்டி, மூவேந்திரன், சோலை இளவரசன், பிஆர்சி திருமுருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

## ராமேஸ்வரம் மீனவர்கள் 2-வது நாளாக தொடர் வேலைநிறுத்தம்

**ராமநாதபுரம், ஆக. 13-**

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் இருந்து 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 55 நாட்களில் மட்டும் 50-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம், வவுனியா சிறைகளில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

2 நாட்களுக்கு முன்புகூட ராமேசுவரத்தில் இருந்து மீன் பிடிக்க சென்ற 7 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்ததுடன், அவர்களது விசைப்படகையும் பறிமுதல் செய்தது. ராமேசுவரம், பாம்பன் உள்பட அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், பாரம்பரிய கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையின் எந்த பிரச்சினையும் இன்றி மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முன்தினம் முதல் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கினர்.

இதனால் ராமேசுவரம் துறைமுக கடல் பகுதியில் 700-க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் இரண்டாவது நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தசூழலில் இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (புதன்கிழமை) காலை 10 மணி அளவில் தங்கச்சிமடம் வலசை பஸ் நிறுத்தம் அருகே அனைத்து விசைப்படகு மீனவர்கள் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், சுதந்திர தினத்தன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருப்பது, 19-ந்தேதி ரெயில் மறியல் நடத்துவது என மீனவர்கள் முடிவெடுத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## நத்தம் பகுதி விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தி விழா கோலாகலம்

**நத்தம், ஆக. 13-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோவில் அருகில் உள்ள விநாயகர் சன்னதியில் மஹாசங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது.இதையொட்டி விநாயகப் பெருமானுக்கு அருகம்புல்,ரோஜா, மல்லிகை, உள்ளிட்ட பல பூமாலைகள் செலுத்தபட்டு சிறப்பு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதைப் போலவே கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் உள்ள விநாயகர், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள வலம்புரி விநாயகர் சன்னதி, பகவதி அம்மன் கோவிலில் உள்ள வெற்றி விநாயகர் சன்னதிகளிலும் மஹா சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி தரிசனம் செய்தனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து மத்திய அரசின் சுகாதாரத்துறையின் சார்பில் புதுடெல்லியில் நடைபெற்ற 15-வது இந்திய உறுப்புதான தினம் நிகழ்ச்சியில் சென்னை மருத்துவ கல்லூரி மற்றும் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை குழுவிற்கு வழங்கப்பட்ட மூளை சாவு அடைந்த நோயாளிகளை பராமரிக்கும் சிறந்த குழுவிற்கான விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.177 கோடியே 16 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், மீன்விதை பண்ணை மற்றும் பயிற்சி மையத்துடன் கூடிய அலுவலக கட்டிடம் என 9 முடிவுற்ற திட்டப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதில் அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




● சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் நேற்று முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடிமைப்பொருட்களை வழங்கும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப்பொருட்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இதில் மண்டலக்குழு தலைவர் எஸ்.மதன்மோகன், துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### இளைஞர்களின் வளர்ச்சியில் தி.மு.க. அரசு:

# துணை முதல்வர் உதயநிதி பெருமிதம்

சென்னை, ஆக. 13

தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சிக்காக, 4 ஆண்டு தி.மு.க. ஆட்சியில் மேற்கொண்ட நடவடிக்கைகளும், திட்டங்களில் பயனடைந்தவர்கள் குறித்தும் விளக்கும் வீடியோவை துணை முதலமைச்சரும், தி.மு.க. இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பதிவில் வெளியிட்டு உள்ளார்.

விழுப்புரம் இளைஞனின் வியாபார முன்னேற்றம், கோவை இளம்பெண் இஸ்ரோ வரை பணிக்கு சென்றது. மதுரை இளைஞன் ஜெர்மனி சென்று வாழ்க்கையில் உயர்ந்தது என திராவிட மாடல் ஆட்சியில் இளைஞர்களுக்கு கல்வி மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கு தேவையானவற்றை சரியாக செய்து உள்ளதை விளக்கிச் செல்கிறது இந்த வீடியோ பதிவு.

தமிழ்நாட்டில் உள்ள, 11 ஆயிரம் நிறுவனங்களில், 8500க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கடந்த 4 ஆண்டு தி.மு.க. ஆட்சியில் உருவானவை. இதில் 50 சதவீதத்துக்கு மேலான நிறுவனங்களை தலைமை எடுத்து நடத்துவது பெண்கள் தான். இதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்பதை தரவுகளுடன் விளக்குகிறது இந்த வீடியோ பதிவு. தமிழ்நாட்டு இளைஞர்கள் மீது நம்பிக்கை வைத்து உலகையே வெல்லக்கூடிய வகையில் அவர்களை தயார்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு என்று கூறி வீடியோ பதிவு நிறைவு பெறுகிறது.



● சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாக கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று 2025-ம் ஆண்டு ஜூலை மாதம் வரையிலான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் ஷில்பா பிரபாகர்சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி நேற்று ஓசூர் மாநகர் பாகலூர் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக அலுவலகத்திற்கு நேரில் சென்று மாவட்ட கழக அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி. தம்பிதுரை, முன்னாள் அமைச்சர்கள் கே.பி.அன்பழகன், கே.பி.முனுசாமி மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் பலரும் உடனிருந்தனர்.

### கல்லறை திருநாள் அன்று அறிவிக்கப்பட்டுள்ள

# 'டெட்' தேர்வு தேதியை மாற்ற வேண்டும்

## எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, ஆக. 13-

ஆசிரியர் தகுதி தேர்வு (டெட்) தேதியை மாற்ற வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

நவம்பர் 1,2 ஆகிய தேதிகளில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்படும் என நிர்வாகத் திறனற்ற திமுக அரசு, அறிவித்து விளம்பரம் வெளியிட்டுள்ளது. கிறிஸ்தவ மக்கள் அனைவரும் வழிபடும் கல்லறைத் திருநாள் அன்று தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது.

உலகத்தில் எந்த நாட்டில் இருந்தாலும், கிறிஸ்தவப் பெருமக்கள், மறைந்த தங்கள் உறவினர்கள் மற்றும் முன்னோர்களை அவர்தம் கல்லறையில் வழிபடுவர் என்பதால், அவர்களால் தேர்வுக்கு செல்ல இயலாது. ஒரு சரியான நிர்வாகம் உள்ள அரசு இதையெல்லாம் கருத்திற் கொண்டிருக்கும். உடனடியாக ஆசிரியர் தகுதித் தேர்வை வேறொரு உகந்த தேதிக்கு மாற்றி அறிவிக்க வேண்டும் என ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பொறியியல் படிப்புக்கான துணை கலந்தாய்வு:

# விண்ணப்பிக்க நாளை வரை அவகாசம்

சென்னை, ஆக. 13-

இளநிலை பொறியியல் படிப்புக்கான துணைக் கலந்தாய்வில் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு ஆக. 14 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது: 12-ஆம் வகுப்பு பொது மற்றும் தொழிற்கல்வி பயின்று சிறப்பு துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை 2025-26 பொதுக் கலந்தாய்வில் கலந்து கொள்ளத் தவறிய மாணவர்கள், இளநிலை பொறியியல் பட்டப்படிப்பில் சேர்க்கை பெற வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கில் துணைக் கலந்தாய்வு நடத்தப்படுகிறது.

துணைக் கலந்தாய்வில் மாணவர்கள் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு நேற்று (12.08.2025) வரை வழங்கப்பட்டிருந்தது. இந்த துணைக் கலந்தாய்வில் இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் தங்களது விண்ணப்பப் பதிவினை மேற்கொள்ள ஏதுவாக, மேலும் இரண்டு நாள்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாணவர்கள் www.tneaonline.org என்ற இணையதள முகவரியில் ஆக. 14 வரை விண்ணப்பப் பதிவினை மேற்கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மாணவர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின், தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பொறியியற் மாணவர் சேர்க்கை சேவை மையங்களை (TFC Centres) தொடர்பு கொள்ளலாம். மேலும், 1800-425-0110 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண் வாயிலாகத் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற மக்களவையில் திருத்தப்பட்ட வருமான வரி மசோதா நிறைவேற்றம்

புதுடெல்லி, ஆக. 13-

புதிய வருமான வரி மசோதா 2025 எந்த எதிர்க்கட்சி விவாதமும் இல்லாமல் மக்களவையில் நிறைவேறியது. இந்த மசோதா ஏப்ரல் 1, 2026 முதல் அமலுக்கு வரும். வருமான வரிச் சட்டம், 1961-க்குப் பதிலாக இந்தப் புதிய மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய மசோதா பழைய சிக்கலான வரி அமைப்பை சுமார் 50% எளிதாக்குகிறது.

வருமான வரி மசோதா 2025 எந்த புதிய வரிகளையும் விதிக்காது.

இது தற்போதுள்ள வரி அடுக்குகள் மற்றும் விகிதங்களை மாற்றாது. மேலும், ஐடிஆர் தாக்கல் செய்வதற்கான நிலுவைத் தேதிகள், வருமான வரி அடுக்குகள் மற்றும் மூலதன ஆதாயங்களில் எந்த மாற்றங்களும் இருக்காது.

இந்த மசோதாவில் பிரிவு 80M, குறைந்தபட்ச வரி, மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் தொடர்பான வரி விதிகள் உள்ளிட்டவற்றில் முக்கிய மாற்றங்கள் உள்ளன.


புதிய வரி முறையை தேர்வு செய்கின்ற நிறுவனங்கள் தற்போது 1961 சட்டத்தின் முந்தையப் பிரிவு 80 M இன் கீழ் விலக்குகளை பெற உரிமை பெறுவார்கள்.

குறைந்தபட்ச மாற்று வரி (MAT) மற்றும் மாற்று குறைந்தபட்ச வரி விதிகளை தனித்தனி பகுதிகளாக பிரிப்பதன் மூலம் புதிய மசோதா தெளிவுப்படுத்துகிறது.

எளிமையான புரிதலுக்காக 'முந்தைய ஆண்டு' மற்றும் 'மதிப்பீட்டு ஆண்டு' என்பதற்குப் பதிலாக 'வரி ஆண்டு' என்ற ஒருங்கிணைந்த கருத்து இப்போது இருக்கும். டிடிஎஸ் திருத்த அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 6 ஆண்டுகளில் இருந்து 2 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களுக்கு இடையேயான ஈவுத்தொகையில் ரூ.80 லட்சம் வரை விலக்கு அளிக்கப்படும். பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள், புதிய சொத்துகளில் மூலதன ஆதாயங்களை மீண்டும் முதலீடு செய்வது வருமானத்திற்கான பயன்பாடாக கருதப்படும்.

மத மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பெயர் குறிப்பிடப்படாத நன்கொடைகளுக்கு தொடர்ந்து வரி விலக்கு அளிக்கப்படும் உள்ளிட்ட அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.



● மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து வடக்கு 5-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் அதன் பகுதி செயலாளர் வக்கீல் அசோகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மகளிரணி செயலாளர் பா.வளர்மதி, பொறுப்பாளர் ஆனிமுத்து, வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், ஏ.பார்த்திபன், வி.பி.ஆர்.செல்வகுமார், அண்ணாநகர் ரவிச்சந்திரன், வி.எஸ்.பாண்டியராஜன், டி.ராமச்சந்திரன், பி.குமார், பி.தனபால், கே.கே.நகர் மணி, தினேஷ்அலெக்ஸ்சாண்டர், ஜெ.சுந்தர், முகமது ஷாமாஸ், மேலமடை பாண்டியராஜா, அக்னிராஜ், என்.சுகுமாறன், கே.பழனிச்சாமி, சுலைமான் ஆகியோர் உள்ளனர்.